393

வெளியீடு எண் 189.

# தோன்றினார்கள்

…ாவடுதுறை ஆதீனம்
1964

823:417xWx
N64
112122

உ

சிவமயம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகபரமாசாரியசுவாமிகள்**

# ஜன்மநக்ஷத்திர விழாமலர்

**சோபகிருது – பங்குனி – ச**

17—3—64

வெளியீடு எண் 189.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தோன்றினார்கள்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்
1964

உரிமை பதிவு.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

# முன்னுரை

உலகத்தில் சிலரைப் பிறந்தார்கள் என்று வழங்குகிறோம். சிலரைத் தோன்றினார்கள் என்கிறோம். சிலரை ஈன்றார்கள், பெற்றார்கள், போட்டார்கள் என்றெல்லாம் வழங்குகிறோம். எல்லாவற்றிற்கும் பிறவியை எடுத்தார்கள் என்பதே பொருளாயினும், தாந்தாம்செய்த வினைகளை நுகர்வதற்காகப் பிறந்ததைப் பிறந்தார்கள் என்றும், தாய் தகப்பன் செய்த நல்வினை தீவினைகட்கீடாக வாய்த்த பிள்ளைப்பேற்றைப் பெற்றார்கள் என்றும், உலகத்திலே ஏதோ சிற்சில நல்ல காரியங்களைச் செய்யவும் செய்த காரியங்கள் பல்லூழிக்காலம் நிலைத்திருந்து பயன்தரவும் தோன்றியவர்களைத் தோன்றினார்கள் என்றும், மேல்நிலையிலிருந்து ஒன்றை நிறைவேற்றக் கீழே இறங்கிவந்தவர்களை அவதரித்தார்கள் என்றும் கூறுகிறோம். இதைக் கூர்ந்து நோக்கின் நமக்கு வேறுபாடு தோன்றுகிறதல்லவா? ஆனாலும், அவதரித்தார்கள் என்பது வடசொல்லாதலின் தோன்றினார்கள் எனப் பொதுவாய்பாட்டால் வழங்குதலும் தமிழ்மரபு. 'தோன்றிற் புகழொடுதோன்றுக' முதலான சொல்லாட்சிகளும் இக்கருத்தை நன்குவிளக்கும்.

அத்தகைய பெரியோர்கள் தோன்றினார்கள் என்றால் அவர்கள் பிறப்பும் வாழ்வும், சொல்லும்

செயலும், பலருக்குப் பலகாலம் பயன்படும் எடுத்துக்காட்டாகவும் - இலக்கியமாகவும் - வள்ளன்மையாகவும் - மலர்ந்துள்ளன என்பதே ஊன்றி அறியத்தக்கது.

திருமூலர் தோன்றினர்; அவருடைய வாழ்வு சமுதாயச் சீர்திருத்தமாகவும் திருமந்திரமாகவும் மலர்ந்தது. சமயாசாரியர்கள் தோன்றினர்கள்; அவர்கள் வாழ்வு சமயப்பேரரணகவும் பத்திப் பனுவல்களாகவும் விளங்கின. சந்தானசாரியர்கள் தோன்றினர்கள்; அவர்கள் வாழ்வு ஞானனுபவமாகவும் ஞானநூல்களாகவும் உபதேசபரம்பரையாகவும் பரந்தன. சந்தானசாரிய பரம்பரையில் வந்த ஞானசாரியப் பெருமக்களாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்கள் தோன்றினர்கள்; அவர்கள் வாழ்வு ஞானவாழ்வாகவும், நாட்டின் தேவைக்குத் தகப் பயன்படும் தெய்வீக வாழ்வாகவும் சிறந்தது என்பதை விளக்கும் நூல் இது.

திருக்கயிலாய பரம்பரைத் திருநந்தி மரபு திருவாவடுதுறை ஆதீனத்து 21-வது குருமகா சந்நிதானமாக விளங்குகிற ஸ்ரீ-ல-ஸ்ரீ **சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஜன்ம நக்ஷத்திர விழாமலராக** இது வெளிவருகிறது.

‘மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றி இவன் தந்தை, என்நோற்ருன் கொல் என்னுஞ் சொல்’ என்பர் வள்ளுவர். ஆதலின் சிவஞான பரம்பரையில் இருபத்தோராவது தலைமுறை ஞானபுத்திர சிகாமணியாய் - ஞானசாரியப் பெருந்தகையாய்த்

தோன்றிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது பிறந்தநாள் விழாவில் தம்முன்னோர்களின் பெருமைகளைப் பரப்பித் தமிழுலகத்தை நினைவுகூர வைத்து, 'நின்குலத்துள்ளோர் புகழ்களெல்லாம் நின்புகழாக்கிக்கொண்டாய்' என்ற பெரும்புலவன் வாக்கிற்கு இணங்கச் சிவஞானவாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும் நினைவுகூரவைக்கும் முறையில் அமைந்தது இம்மலர் என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை
12—3—64

ஆதீன மகாவித்துவான்,
**ச. தண்டபாணி தேசிகர்.**

உ

சிவமயம்

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

உ
சிவமயம்

# தோன்றினார்கள்

உலகத்திலே எத்தனையோ பேர் தோன்றினார்கள்; இன்றும் தோன்றுகின்றார்கள். அத்தனை பேரையும் அறிவேட்டிலே எழுதி அழியாமல் வைத்துக்கொள்ள உலகம் முயற்சி செய்யவில்லை. முடியவுமில்லை. சில பேர்களை மறந்தாலுங்கூட உலகத்தால் மறக்க முடிகிற தில்லை. ஏனென்று கேட்கிறீர்கள்?

திருத்துழாயும் - சிவகரந்தையும் - திருநீற்றுப் பச்சையும் முளைக்கும்போதே நறுமணத்தோடு முளைக் கின்றன. மணம் அவைகளுக்குக் கருவிலே வாய்த்த திருவாக அமைந்திருக்கிறது. அதுபோல மக்களிலும் சிலபேர் பிறக்கின்றபோதே புகழோடும் அறிவோடும் பிறக்கிறார்கள். பிறந்த பிறகு அவர்களுக்கு ஞானம் சார்பினாலோ சம்பிரதாயத்தினாலோ சடங்குகளாலோ ஊட்டப்பெறவில்லை. மலருக்கு மணம்போல அவர் களுக்கு அறிவு இயற்கை. புகழ் சொந்தச் சொத்து. வள்ளுவரும் 'தோன்றின் புகழொடு தோன்றுக' என் கிறார். பிறக்கும்போதே புகழொடு பிறக்கமுடியுமா? வள்ளுவர் இப்படிச் சொல்லுகிறாரே என்று எண்ணு கிறார் பரிமேலழகர். 'புகழுக்கு ஏதுவாகிய குணங்க ளோடு தோன்றுக' என்று உரை எழுதினார். புகழுக்கு ஏதுவாகிய குணம் எது? அறிவு. அறிவோ உயிரின் இயல்பான குணம். சுண்ணும்பைவிட்டு வெண்மை யைப் பிரிக்கமுடியுமா? இருளைவிட்டுக் கருமையைப்

பிரிக்கமுடியுமா? சூரியனைவிட்டு ஒளியைப் பிரிக்க முடியுமா? அவைபோலத்தான் உயிரைவிட்டு அறிவைப் பிரிக்கமுடியாது.

அறிவு உறுதியையும் உயர்வையும் அளிக்கும் போது உண்மையறிவு என்ற பெயரை அடைகிறது. எல்லாவற்றையும் இருந்தபடியே அறியும் ஆற்றலைப் பெற்று அருள்வண்ணமாகத் திகழும்போது சிவஞான மாகிறது. உற்றாரைக்கண்டு - உறவினரைக்கண்டு - உலகைக்கண்டு - உலகத்தின் உண்மைகளைக்கண்டு - உண்மை எங்கும் என்றும் பரந்திருத்தலைக் கண்டு படிப்படியாக உயர்ந்து உலகைவிட்டு - உடலைவிட்டு - எல்லாப் பொருள்களையும் எமக்காகப் படைத்துதவிய இறைவனைப் பற்றியபோதுதான் அது உவமையிலாக் கலைஞானமாய்ப் பின்னர் உணர்வரிய மெய்ஞ்ஞான மாகிறது. இத்தகைய எல்லையிலாப் பேரறிவினைப் படைத்தவர்களே உலகத்தால் என்றும் மறக்க முடியாதவர்கள். அவர்கள்காலத்திலே அவர்கள் உலகை மறக்கவில்லை. உலகிலே எல்லாரும் ஈடேறவேண்டும்; இன்பநிலை எய்தவேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் அவர்கள் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உள்ளவர்கள் ஆனார்கள். அத்தகைய பெரியவர்களுள் திருமூலர் ஒருவர்.

## திருமூலர் தோன்றினார்

செந்தமிழ்ச் சமுதாயத்திலே பொருளற்ற சாதிப் பூசலும், பிறப்பாலேயே பெருமையுண்டு என்கின்ற வரட்டுவாதமும், சடங்குகளே மோட்சசாதனமென்ற முரட்டுப் பிடிவாதமும், ஞானோதயம் பிறப்பாலுயர்ந் தவர்கட்கே உரிமை என்ற பேதைமையும் பரவியிருந்த

நேரத்திலே, ஞானமயமாக விளங்கும் திருக்கயிலையிலிருந்து தென்னாடுவந்து, சிவகாருண்ணியத்தை முன்னிட்டு மூலன் என்னும் இடையன் உடலிற்புகுந்து, பசுமேய்த்து, சாதிகள் தோன்றிய வரலாறு; சிவானுபவமும் சிவ சிந்தையுமே பெருமைபெறும் உபாயங்கள்; சடங்குகளின் அடிப்படைத் தத்துவங்கள்; தத்துவமும் குறிக்கோளும் அறிந்து செய்யப்படாத சடங்குகளால் எள்ளளவும் பயன் இல்லை; பரிபாகம் உற்றவர்களே திருவருள் துணையால் ஞானம் பெறுதற்கு உரியவர்கள் என்பது முதலிய உண்மைகளை உணர்த்தியவர் சிவயோகியார். திருவாவடுதுறைக்குப் பக்கத்திலுள்ள சாத்தனூரில் மூலன் உடலிற்புகுந்து திருமூலரானார். உயிர் பரிபாகச் சிறப்பால் உயர்ந்தது. உயிர் போர்த்த சட்டை உடல். உடல் தாய் தந்தையர்வழி வந்தது. அதனால் உயிர்க்குள்ள உயர்வு குன்றிவிடாதென்பதை விளக்கினார். அநுபவத்திற்கே பெருமையுண்டு என்பதை நிலைநாட்டினார்.

உலகம் மாங்கொட்டை முளைக்கவைக்கிற மந்திரவாதியைக்கண்டு மயங்கும் தன்மையதுதானே! தலைவலி காய்ச்சல் தீர்ப்பவனைத்தானே தெய்வம் என்று நம்பும். கையை மூடிக் காசை வரவழைப்பவன்தானே அதற்குக் கடவுள். ஆதலால் உலகத்திற்கு ஒழுக்கத்தையும் உண்மைஞானத்தையும் போதிக்க வேண்டுமானால், உலகத்திற்கு நம்பிக்கை உண்டாக்கவேண்டும்; ஏதாவது அற்புதங்களைச் செய்து அவர்களை நம்பவைக்கவேண்டும்; வைத்தியஞ்செய்து மயக்கவேண்டுமென்று எண்ணினார். பல அற்புதங்களை நிகழ்த்தினார். உலகம் திருமூலரைத் தெய்வ இருடியாக நம்பிற்று.

அப்போது மருந்துமுறைகள் சிலவற்றைத் தெரிவித்தார். மருந்தெல்லாம் பசிக்கு உணவுபோலத் தற்கால சாந்தியே ஒழிய உறுதியான நன்மையைப் பயவாது. உடலுக்கு உறுதி யோகவழி ஒன்றுலேயே விளையும். யோகம் அகவொழுக்கமும், புறவொழுக்கமும் ஆகிய அஸ்திவாரங்களில் எழும்பிய இன்பக்கோட்டை. யோகக்கோட்டையை எழுப்ப எட்டு வகையான மூலப்பொருள்கள் தேவை. அவைகளை ஆபத்தில்லாமல் கையாள என்போன்ற வழிகாட்டிகளும் தேவை. அவர்களிடம் யோகநெறி தாரணைக்குரிய மந்திர யந்திர தந்திரவகைகள் எல்லாவற்றையும் முறைப்படிக் கற்றுக்கொள்ளவேண்டும்; பழகவேண்டும்; அனுபவிக்க வேண்டும்; அதுவேதானுய் - அபேதஞானமாய் இருத்தல்வேண்டும் என்றுர். சுருங்கச்சொன்னுல் மக்களை வேற்றுமையற்ற யோகநெறியால் சிவயோகத்திலே செலுத்தினுர் எனலாம்.

அதற்காக ஆண்டுக்கொரு பாட்டாக மூவாயிரம் பாடல் செய்தார். மூவாயிரமும் நமக்கு அவர் அளித்த மூலன்தனம். மூலதனம். மூலன் தோன்றினுன். மூலதனம் கொடுத்தான். மோட்சநெறி காட்டினுன்.

## திருஞானசம்பந்தர் தோன்றினுர்

கி. பி. ஏழாம்நூற்றுண்டிலே செந்தமிழ் மக்களிடையே பரம்பரையாக வந்த திருவருட்பொலிவு குன்றியது; சைன பௌத்தக்காற்றுச் சுற்றியடித்தது. எல்லாரும் அக்காற்றைக்கொண்டு கடவுளை மறந்து வாழத் தொடங்கினுர்கள்; அத்தகைய சூழ்நிலையில் சிவபாத இருதயர் என்னும் சிவநெறி அந்தணர் செய்த

தவத்தால் ஒரு குழந்தை தோன்றியது ; அதனால் செந்தமிழ்நாடு அடைந்த பயனோ ! வேதநெறி தழைத்தது. சைவநெறி அயல்நெறியை வென்று விளங்கியது.

ஒருநாள் தெய்வக்குழந்தை உலக மாதாவாகிய அம்மையும் அப்பனும் எழுந்தருளியிருக்கின்ற திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே! அப்பா! என்று அழுதது. அவர்கள் ஓடிவந்து பொன்வள்ளத்திலே முலைப்பாலைக் கறந்து சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி உண் அடிசில் என ஊட்டினார்கள். குழந்தை உண்டு, யாருக்கும் காணப்படாத கடவுளைக் கண்டது. உடல்தந்தையாகிய சிவபாத இருதயருக்கும் - தாய் பகவதிக்குங்கூடக் காட்டியது.

படிக்காத குழந்தை - பள்ளிக்கூடமே போகாத குழந்தை, பிஞ்சிலேயே பழுத்துப் பருவம்வந்த பெண்ணின் மனப்பான்மையைப் பெற்றது; என் உள்ளங் கவர் கள்வன் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே என அடையாளம் சொல்லிக் காட்டியது. ஐம்பது வயதுவரையில் காணாத தாய் தந்தையர்களும் பிறரும் பெம்மானைக் கண்டார்கள்.

சைன பௌத்த சமயக்கொடுமையால் மறைந்து போன இசைத்தமிழ் வெள்ளத்தைத் 'தோடுடைய செவியன்' என்ற பதிகம் வழியாகத் தமிழர் செவியிற் பாய்ச்சியது.

பாட்டுக்குத் தாளம் அவசியம். தாளம் இல்லாத பாடல் உப்பில்லாத கறி. ஆதலால், கையாலேயே தாளம்போட்டுக்கொண்டு இசைத்தமிழைப் பாடியது குழந்தை.

குழந்தையின் கை தாளம்போட்டுப் பாடினால் கன்றிவிடுமே என்ற கனிவுள்ளம் கோலக்காவிலுறை கின்ற கடவுளுக்கு.

குழந்தை! இந்தா தாளம்; பொன்னால் செய்யப் பட்டது; கைநோக நீ தாளம்போட வேண்டாம்; இதோ பார், இதிலே சிவயநம சிவயநம என்று எழுதி யிருக்கிறது; இதனாலே தாளம்போட்டுப் பாடு; நீ பாடினால் எனக்கு மிக்க சந்தோஷம்; எல்லோரும் கேட்பார்கள்; உன் இசைத்தமிழ் எல்லோரையுமே உய்விக்கும் என்றார் கடவுள். இப்படிக் குழந்தை தோன்றியது; கடவுளிடமே தாளம் வாங்கியது.

பார்த்தாள் அம்மாள். வெண்கலத்தாளமானால் ஓசை இருக்கும். இதுவோ பொன் தாளம். ஓசை நன்றாக இல்லையே என்று எண்ணினாள்; ஓசை கொடுத் தாள். ஓசை கொடுத்த நாயகி ஆனாள். குழந்தை பொன்தாளத்திற்கு ஓசையையும் பெற்றது. பலவூர் களுக்குச் சென்று பரமனைப் பணிந்து, பதிகங்களைப் பாடி வந்தது.

எல்லாரும் இந்த அதிசயத்தைக் கேட்டார்கள். அங்கங்கேவந்து சுற்றிக்கொண்டார்கள். எண்ணுயிரம் அடியார்கள் இசையாற்கட்டுண்டு இறையன்பு விஞ்சி, குழந்தையை விடாது சூழ்ந்தார்கள். குழந்தை தோன் றியது; இசையால் தமிழ் பரப்பி எல்லாரையும் ஒன்று கூட்டியது. உதிர்ந்துபோன சைவசமுதாயம் ஒன்று பட்டது.

திருவெருக்கத்தம்புலியூரிலே பாணர்மரபிலே திரு நீலகண்டப்பெரும்பாணர் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவரும் அவரது மனைவியார் மதங்கசூளாமணியும் குழந்தையின் இசைப்பாடலுக்கு யாழ் வாசித்தார்கள். குழந்தை செல்லுகிற இடங்களுக்கெல்லாம் கூடவே போனார்கள். இவ்வண்ணம் இசை கலந்த இனிய தமிழால் குழந்தை இசையுலகுக்கே புத்துயிர்தந்து உலாவியது.

திருநெல்வாயிலரத்துறை என்னும் தலத்திலே முத்துச்சிவிகை, முத்துக்குடை, பொன்னால் செய்யப் பட்ட சின்னங்கள் இவைகளைக் கடவுளே கொடுக்கப் பெற்றுக்கொண்டது குழந்தை.

குழந்தைக்கு ஏழுவயதாயிற்று; பூணூல் கல்யா ணம் நடந்தது. பிராமணர்கள் ஏகமாகக் கூடியிருந் தார்கள். குழந்தைக்குக் காயத்திரி மந்திர உபதேசம் செய்ய முன்வந்தார்கள். குழந்தை அவர்களெல்லோ ருக்கும் வேதாகமங்களிலிருந்த சந்தேகங்களைப்போக்கி உயர்ந்த மந்திரம் - மந்திரங்களுக்கெல்லாம் தலைமை யான மந்திரம் சீபஞ்சாக்கரமே என்பதை,

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

என்ற பதிகத்தைப்பாடி உணர்த்திற்று.

திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்திற்குப் போயிருந்தது குழந்தை. அங்கே கொல்லிமழவன் என் னும் அரசன், முயலகன் என்னும் வயிற்றுவலியால் வாடித்துடிக்கும் தன்மகளையும் அழைத்துக்கொண்டு

வந்திருந்தான். குழந்தையின் தெய்வத் தன்மையைக் கேள்வியுற்று வந்த அம்மன்னன் தன் மகளுடைய நோயைத் தீர்த்தருளும்படி வேண்டினன். குழந்தை கருணை நினைவோடு கொல்லிமழவன் மகள் வருந்து வதைக்கண்டு,

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வதோ இவர்மாண்பே.

என்ற பதிகத்தைப் பாடி இறைவனை வேண்டியது. அப்பெண் நோய்நீங்கிப் பரபரப்புடன் எழுந்து வணங்கினாள். இப்படி, குழந்தை தோன்றியது; ஒருத்தியின் நோயைத் தொலைத்தது.

சிலமாதம் கழித்துக் கொடிமாடச் செங்குன்றூர் என்னும் மலைநாட்டுத் தலத்திற்குத் தெய்வக்குழந்தை சென்றிருந்தது. அப்போது முன்பனிக்காலம். அந்தப் பக்கத்திலே விஷசுரம் பரவியிருந்தது. குழந்தையோடு வந்திருந்த அடியார்களையும் அவ்விஷசுரம் பீடித்தது. சிவச்செம்மல்,

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும்
உந்தமக் கூனமன்றே

கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ
றுதிரு நீலகண்டம்.

என்ற பதிகத்தைப் பாடியது. உடனே விஷசுரம் விலகியது. அடியார்களை மட்டும் அன்று; அந்தப் பக்கமே அந்தச்சுரம் இன்றும் வராதவண்ணம் செய்துவிட்டது.

ஒருநாள் கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள பட்டீச்சரத்திற்கு எழுந்தருளியது தெய்வீகக்குழந்தை. நல்ல வெயில் நேரம். குழந்தை வெயிலால் தவிக்குமே என்ற கருணை கடவுளுக்கு. அதனால் அவர் பூதத்தை அழைத்து நீ போய் முத்துப்பந்தர் பிடித்துச்செல் என்று உத்தரவிட்டார். குழந்தை திருக்கோயிலை வலம் வரும்போது பூதம் பந்தரைத் தாங்கிச்சென்றது. எல்லாரும் அதன் நிழலில் சென்றார்கள். பந்தர் கீழிறங்கியது. அடியார்களே அதனைத் தாங்கிச் சென்றனர்.

சிலநாள் கழித்துப் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு ஞானசம்பந்தக்குழந்தை திருவாவடுதுறை வந்து, அங்கே சிலநாள் எழுந்தருளியிருந்தது. சிவபாத இருதயர் என்னும் அவர்தந்தை யாகம்செய்யப் பொன் வேண்டும் என்று வந்தார். தெய்வக் குழந்தை,

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே.

என்ற திருப்பதிகத்தைப் பாடியது. குள்ளமான பூதம் ஒன்று இறைவன் உத்தரவுப்படி ஆயிரம் பொன் முடித்த கிழி ஒன்றைக் கொண்டுவந்து பலிபீடத்தில் வைத்தது. முன்னின்று 'நல்வாக்கால் உய்த்த இக்கிழி பொன்னுலவாக்கிழி, உமக்கு நித்தனுர் அருள்செய்தது' எனக்கூறிமறைந்தது. குழந்தைப்பெருமான் கிழியைப் பெற்றுத் தன் தந்தையாரிடம் கொடுத்து நல்வேள்வி தீது நீங்க நீர் செய்யும் என்றருளினுர்.

இவ்வண்ணம் பற்பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருத்தருமபுரம் என்னும் தலத்திற்கு வந்த போது திருநீலகண்டப் பெரும்பாணரது சுற்றத்தார் களுக்கு இருந்த செருக்கு அடங்க யாழ்மூரிப்பண்ணைப் பாடியது.

திருமருகலுக்கு எழுந்தருளியபோது கோயிலுக்கு அருகாமையில் அழுகுரல் கேட்டது. அதைக்கேட்ட குழந்தைப்பெருமான் உள்ளம் குழைந்தது. அங்கே சென்று பார்த்தார். வணிகப்பெண் ஒருத்தி, தான் மணக்க இருந்த வணிகனும் தானுமாக வந்த இடத்து அவன் பாம்புகடித்து இறக்க வணிகப்பெண் அநாதை யானுள், அதனுல் அரற்றுகின்றுள் என்ற செய்தியை அறிந்து மனம் இரங்கிப் பெருமானை நோக்கி,

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய்! தகுமோ இவளுண் மெலிவே.

என்னும் பதிகத்தைப்பாடினார். வணிகன் விடம்நீங்கி, தூங்கி விழிப்பவன்போல எழுந்தான். மனைவியுடன் குழந்தைப்பெருமான் திருவடியில் வீழ்ந்து வணங்கினான். காழிக் கருணைவேந்தாகிய குழந்தைப்பெருமான் இருவரையும் மணவாழ்வு பொருந்த வழி வகுத்தார். குழந்தைப்பெருமான் தோன்றினார்; விஷம் நீக்கினார்; கன்னியையும் காளையையும் வாழவைத்தார்.

பின்பு ஒருநாள் திருவீழிமிழலைக்கு எழுந்தருளிய போது விண்ணிழி கோயிலிலே பெருமான் காழிநாதராகக் காட்சி தந்தார். அதனால் காழிக்குழந்தையும் நாவுக்கரசுமாகச் சிலநாள் அங்கேயே தங்கியிருந்தனர். ஊரெங்கும் பஞ்சம். அனைவரும் வருந்தினர். வீழிநாதர் இரண்டு அன்பர்கட்கும் பஞ்சம் முடியும்வரை பொற்காசு தந்து காத்தார். அடியார்கள் இருவரும் பொற்காசை விற்று இரண்டு திருமடங்களிலும் அன்னம் பாலித்தனர். பரமனைப் பாடிப் பஞ்சம் போக்கியது குழந்தைப்பெருமான் அவதாரம்.

சிலநாட்கழித்துப் பல தலங்களையும் வழிபட்டுக் கொண்டு திருமறைக்காடு என்னும் வேதாரணியத்திற்கு வந்தார்கள் குழந்தைப்பெருமானும் நாவுக்கரசரும். அங்கே இறைவனை வழிபடுதற்குரிய நேர்வழி அடைபட்டிருந்தது. இருவரும் காரணம் என்ன? என்று அன்பர்களை விசாரித்தனர். அன்பர்கள் முன்பு வேதங்கள் இறைவனை வழிபட்டன ; கதவடைத்தன ; அடைத்த கதவை யாராலும் திறக்கமுடியவில்லை; அது முதல் வழக்கற்றுக்கிடக்கிறது வாயில் ; பக்கவாயில் வழியாகச்சென்று வழிபட்டுவருகிறோம் என்றார்கள்.

இதனைக்கேட்ட நாவுக்கரசர் கதவைத் திறக்கப் பாடினார். குழந்தைப்பெருமான் 'சதுரம் மறைதான்' என்ற பதிகம்பாடி அடைக்கச்செய்தனர். அதுமுதல் அந்த வாயில் அடைக்கவும் திறக்கவுமாக விளங்கிவருகிறது. குழந்தைப்பெருமான் தோன்றினார். அடைபட்ட கதவு அடைக்கவும் திறக்கவுமாயிற்று.

வேதாரணியத்தில் இருக்கின்றபோது ஒருநாள் பாண்டியநாட்டு அடியார்கள் சிலர் வந்து குழந்தைப் பெருமானை வணங்கிப் பாண்டியநாட்டிலே அமண சமயம் பெருகியது; சைவசமயம் சுருங்கிவிட்டது; மன்னனும் புறச்சமயம் புகுந்து நம் சைவத்திற்குத் துன்பம் விளைவிக்கின்றான்; மந்திரி குலச்சிறையாரும், அரசி மங்கையர்க்கரசியாரும் தக்கசமயத்தில் சைவத்தைப் பாதுகாக்கத் தங்களை அழைக்கின்றார்களென்று வேண்டிக்கொண்டார்கள். குழந்தைப் பெருமானும் ஒத்துக்கொண்டார். இதை அறிந்த திருநாவுக்கரசர் ஆண்டில் இளைய ஆளுடையபிள்ளையார் மதுரைக்குப் போனால் சமணர்கள் ஏதேனும் தீங்கிழைப்பார்களே என்று அஞ்சிப் போகவேண்டாமென்று வேண்டினர். குழந்தைப்பெருமான் 'வேயுறு தோளிபங்கன்' என்னும் கோளறு பதிகத்தைப்பாடி அப்பரிடம் விடைபெற்று மதுரையடைந்தார். அங்கே அமணர்கள் காழிப்பெருமான் எழுந்தருளியிருந்த திருமடத்தில் அக்கினியை ஏவிவிட மந்திரங்களை ஓதினர். மந்திரப்பேரரசாகிய திருவைந்தெழுத்தின் முன்னே அமணர் மந்திரம் பலிக்கவில்லை. ஆதலால் அவர்களே மடத்தில் தீயிட்டுக் கொளுத்தினர். அடியார்கள், திருமடம் தீக்கொளுவப் பட்டதைத் தெரிவித்தனர். காழிக்கவுணியகுல வேந்தராகிய சம்பந்தர் அரசனுக்கு உண்மையை உணர்த்த

வேண்டியும், வேருெருவன் வீட்டில் பகற்போதில் தீக் கொளுத்தும் அநியாயம் அரசின் ஆற்ருமையும் ஒற்று மையும் ஆம் என எண்ணியும், 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பதிகத்துப் பாடினர். அரசனுக்கு வெப்புநோயாகிய காய்ச்சல் கடுமையாக உண்டாயிற்று. அமணர்களும் காழிவேந்தரும் அடியார்களும் அரசனும் அமைச்சரும் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி அரசனுடைய இடப்பக்கத்தைக் கவுணியர்பெருமான் திருவைந்தெழுத்தோதித் திருநீறு கொண்டு தடவினர். உடனே வெப்புக் குறைந்தது. காய்ச்சல் நீங்கியது. அமணர்கள் மயிற்பீலி ஏந்தி மந்திரம் சொல்லித் தடவினர். அவர்கள் தடவத்தடவ நோய் மிகுந்தது. அரசன் தாங்கமுடியாது தவித்து, குழந்தைப்பெருமானே! இப்பக்கமும் தீர்த்தருளுக என வேண்டினன். பெருமானும் அவ்வாறே தீர்த்து அரசனை உய்யக்கொண்டார். அரசன் மனம் மாறித் தேறி ஞானக்குழந்தையைப் பாராட்டினன்.

இதனையுணர்ந்த சமணர்கள் எங்கே தம் மதத்தை விட்டு அரசன் பிரிந்துபோவானே என்று பயந்து, ஞானப்பிள்ளையை வாதுக்கு அழைத்தனர். அனல்வாதமும் புனல்வாதமும் புரிவதெனத் திட்டமிடப்பட்டது. அதில் சமணர்கள் தம் மந்திரத்தை ஏட்டில் எழுதித் தீயிலிட்டனர். இட்டகணமே இட்ட ஓலை எரிந்து சாம்பராயிற்று. ஞானப்பிள்ளை 'தளிரிளவளரொளி' என்னும் பதிகத்தை ஏட்டில் எழுதித் தீயிலிட்டார். ஏடு பசுமைகுன்ருதிருந்தது.

சமணர்கள் அனல்வாதம் போதும் புனல்வாதம் செய்க என வேண்டினர். தம் மந்திரத்தை ஏட்டில்

எழுதி வைகையிலிட்டனர். அவர்கள் ஏடு ஆற்றின் வழியே மிதந்து கடலை அடைந்துவிட்டது. ஞான சம்பந்தப்பிள்ளையார் 'வாழ்க அந்தணர்' என்னும் பதி கத்தை எழுதி இட்டார். ஏடு எதிர்த்துச் சென்று திருவேடகம் என்னும் தலத்தை அடைந்தது. இவ் வண்ணம் குழந்தைப்பெருமான் தோன்றினர். அனலி லும் புனலிலும் சோதனை காட்டி, உண்மைச் சமய மாகிய சைவத்தைப் பாதுகாத்தார்.

இவ்வண்ணமே கொள்ளம்பூதூரில் 'கொட்டமே கமழும்' என்னும் பதிகம் பாடி, ஓடம் தானாகவே செல்லப் பணித்தார். போதிமங்கைக்கு அருகில் புத்த நந்தியின் தலையில் இடிவிழப் பணித்தார். அங்குள்ள சமணர்களோடு வாதிட்டு வென்றூர். சைவத்தை நிலைநாட்டினர். திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண்பனையாக்கினர். மயிலாப்பூரிலே பாம்பு கடித்து இறந்த சிவநேசச்செட்டியாரின் பெண்ணாகிய பூம்பா வையின் எலும்பிருந்த குடத்தைக் கொணரச்செய்து எலும்பைப் பெண்ணாக்கினர்.

திருநல்லூரிலே திருமணங்கொண்டருளி இறைவ னோடு இரண்டறக்கலந்து இன்பமயமானர். திருஞான சம்பந்தர் தோன்றினர். சிவஞானம் தழைத்தது.

## திருநாவுக்கரசர் தோன்றினர்

தொண்டைநாடு நடுநாடு இவைகளின் ஆட்சி பல்லவ மன்னர்கள் கையிலிருந்தகாலம். கி. பி. 600 முதல் 630 வரை முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சி நிலவிவந்தது. ஒருபக்கம் பௌத்தம், மற்றொருபக்கம் சைனம் ஆகிய மதங்கள் பரவித் தமிழ்நாட்டின் பழம்

பெரும் பண்பாட்டைச் சீர்குலைத்த நேரம். அப்போது திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே சைவ வேளாள மரபிலே புகழனார் என்பவருக்கும் மாதினி யார் என்பவருக்கும் பிள்ளையாகத் தோன்றினார். இவர் பிள்ளைத்திருநாமம் மருள்நீக்கியார் என்பது. இவரது தமக்கை திலகவதியார். இவ்வம்மையாருக்கு வயது பன்னிரண்டு. தாய் தந்தையர் திருமணம் முடிக்கக் கருதியிருந்த கலிப்பகையார் என்பவர் போருக்குச் சென்று அங்கே இறந்தார். புகழனாரும் சிவபதமடைந் தார். தாய் மாதினியாரும் கணவனாருடன் உடன் கட்டையேறி உயிர் துறந்தார். தம்பியை வளர்க்கும் பொறுப்பு தமக்கையாருடையதாயிற்று. தம்பியாருள ராக வேண்டும் என வைத்த தயாவினால் திலகவதியார் உயிர்தாங்கியிருந்தார்; தவவொழுக்கம் பூண்டு திருக் கோயிற் பணிவிடைகள்செய்து பொழுதுபோக்கினார்.

மருணீக்கியார் சிறந்த கல்வியாளராகத்திகழ்ந்தார்; பல சமய உண்மைகளையும் உணர்ந்தார். சிறப்பாகச் சமணசமயவுண்மைகள் இவருடைய இளமனத்தைக் கவர்ந்தது. அதில் ஈடுபட்டு உயர்ந்தார்; புத்தர்களை வாதில் வென்று சமண சமயத்தைக் காப்பாற்றினார். அதனால் சமணர்கள் தருமசேனர் என்னும் பட்டம் தந்து இவரைச் சமணசமயத் தலைவராக்கினார்கள்.

தம்பியார் சைவசமயத்தைவிட்டுச் சமணசமயம் சேர்ந்து தலைவரானதை அறிந்த திலகவதியார், மனம் நொந்து திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானை நோக்கி மனங்குழைந்து, தம்பி சைவசமயத்தைச் சாரத் திருவுளம்பாலிக்கவேண்டும் என்று வேண்டினார்.

இறைவன் ஒருநாள் அம்மையார்கனவிற்ருேன்றி, 'தருமசேனனைச் சூலைநோயால் வருந்தச்செய்து நாம் ஆட்கொள்வோம்' என்று ஆணைதந்து மறைந்தனர். சிலநாள் சென்றன.

ஒருநாள் தருமசேனருக்குத் தீர்க்கமுடியாத சூலை நோய் வந்தது. தாங்கமுடியாமல் தவித்தார். மந்திரத் தாலும் மருந்தாலும் எப்படி எப்படியோ சமணர்கள் முயன்று பார்த்தனர். முடியவில்லை. ஒவ்வொருவராக நழுவிவிட்டனர். தனியே கிடந்து தாங்கமுடியாமற் சிலநாள் தவித்தார். பின்னர் வேறு கதியில்லாமல் தம் தமக்கையாருக்கு ஆள் அனுப்பினுர்.

தமக்கையாரோ சமணப்பள்ளிக்கு நாம் போத லாகாது ஆதலால், இங்கே வந்தால் ஓரளவு பார்க்கலா மென்று சொல்லி அனுப்பினுர். தருமசேனர் சில ஆட் களின் துணைகொண்டு ஒருநாள் இரவில்வந்து தமக்கை யாரை வணங்கி 'இந்நோய் என்னுல் பொறுக்கமுடிய வில்லை ; எப்படியாவது காப்பாற்றவேண்டும்' என்று வேண்டினுர்.

திலகவதியார் இறைவன்திருவருளைத் தியானித்து, தம்பி ! நாம் பிறந்தது சைவம், சிவபெருமானே நமது முழுமுதற்கடவுள், சிவப்பணிசெய்து கிடப்பதே நம் கடமை, நம் கடமையை நாம் ஒழுங்காகச் செய்து வந்தால் நம்மை வினைகள் வந்து நலியா, நோயணுகா, வந்தநோய் தானேவிலகும் என்று உபதேசித்தார்.

உண்மை உணர்ந்த தருமசேனர் தமக்கையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அடியேனை ஆட் கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

திலகவதியார் தம்பியைக் கோயிலுக்கு அழைத்துச் செல்ல விரும்பித் திருநீற்றை ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்தார். தருமசேனர் அதனைப் பேராதரத்தோடு ஏற்றுப் பெருமான் திருவருளை வணங்கித் தரித்துக் கொண்டு, தமக்கையாரோடு திருவீரட்டானேசுவரர் திருமுன்பு சென்றார். மெய்மறந்து திருமுன் நின்றார். இறைவனுக்குப் பாமாலை சாத்தி வழிபடவேண்டும் என்று உள்ளம் இவருக்கு உண்டாயிற்று. 'கூற்றாயின வாறு விலக்ககிலீர்' என்னும் திருப்பதிகத்தைப் பாடி வணங்கினார். நோய் நீங்கியது. சொல்வளமிக்க தூய திருப்பதிகம் பாடியமையால் இறைவன் இவருக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயர் செந்தமிழ்நாடு எங்கணும் விளங்குவதாக என்று அசரீரியால் ஆணை தந்தருளினார்.

மருணீக்கியார் தருமசேனராகித் திருநாவுக்கரச ராய்ப் பல தலங்களுக்கும் சென்று திருப்பதிகம் விண்ணப்பிக்கவேண்டுமென்னும் குறிப்போடிருக்கும் நாளையில், சமணர்கள் பாடலிபுரத்திற்கு ஓடினார்கள். மகேந்திரவர்ம மன்னனிடம் சென்று 'அநியாயம்! அநியாயம்! நம் தருமசேனன் வயிற்றுவலி என்ற பொய்க்காரணம் காட்டி, தமக்கையாரிடம் சென்று திருவதிகையில் சைவனாகிவிட்டான்; நம் சமயத்தின் உண்மைகளைக் கைவிட்டான்; ஆதலால், அவனை அழைத்துவந்து தக்கபடி தண்டிக்கவேண்டும்' என்று முறையிட்டனர்.

பல்லவமன்னன் ஆள் அனுப்பித் தருமசேனரை அழைத்துவரச் செய்தான். ஆட்கள் திருநாவுக்கரச ரிடஞ்சென்று அழைத்தனர். அதுகேட்ட சுவாமிகள்,

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னேமே.

என்ற பதிகத்தை விண்ணப்பித்து வரமாட்டோம் என மறுத்தனர். பின், மந்திரிகள் வந்து வேண்டினர். திருவருளைத்துணையாகக்கொண்டு பாடலிபுரம்சென்று மன்னனைக் கண்டார்.

பல்லவமன்னன் இவரைச்சுண்ணும்புக்காளவாயி லிட்டான். திருநாவுக்கரசு சுவாமிகள், திருவடியைத் தியானித்துக்கொண்டு 'மாசில் வீணையும்' என்னும் பதிகத்தைப் பாடி, நீற்றறையில் இன்பமாக இருந்தார். ஒரு வாரமாயிற்று. நீற்றறையைத் திறந்து பார்த்தான் மன்னன். திருநாவுக்கரசு சுவாமிகள் ஊனமில்லாமல் மலர்ந்த முகத்தோடு எழுந்தருளியிருந்தார். மன்னன் பெரிதும் வியந்தான்.

சமணர்கள் மனம்புழுங்கி, இவனைச் சும்மாவிடுத லாகாது, விடம் ஊட்டிக் கொல்லவேண்டும் என்று வேண்டினர். அரசனும் அப்படியே ஆணையிட்டான். பாற்சோற்றில் நஞ்சுகலந்து ஊட்டினார்கள். சுவாமி கள் திருநீலகண்டப்பெருமான் திருவருளால் ஊறு ஒன்றுமின்றி விளங்கினார்கள்.

இதனைக்கண்ட சமணர்கள் திடுக்கிட்டு, அரச யானையைக்கொண்டு இடறிக் கொல்லவேண்டுமென்று அரசனிடம் தெரிவித்தனர். மன்னனும் மதிகலங்கி ஏவினன். பட்டத்து யானை அவிழ்த்துவிடப்பட்டது. சுவாமிகள் 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்னும் பதிகம் பாடினர். யானை அவரை வலம்வந்து பணிந்து சென்றது.

சமணர்கள் இதனைக்கண்டு வியந்து இனி என்ன செய்வோம் என்று கவலைப்பட்டனர். 'இவரைக் கல்லோடு கட்டிக் கடலில் போட்டுவிடுவது' என்ற முடிவுக்கு வந்து அரசனிடம் முறையிட்டார்கள். அரசனும் அவ்வாறே செய்வித்தான். சுவாமிகள் 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே' என்றுறுதிகொண்டு 'சொற்றுணை வேதியன்' என்னும் பதிகத்தைப் பாடினர். கல்லே தெப்பமாயிற்று. மிதந்து வந்தது. திருப்பாதிரிப் புலியூரில் கரைசேர்ந்தது. இதனைப் பல்லாயிர மக்கள் கண்டு திருவருளை வியந்து போற்றினர்.

இவ்வண்ணம் திருநாவுக்கரசர் தோன்றினர். நம்பர் அருளாமையால் புறச்சமயம் சேர்ந்தாலும் புந்தி திருந்திச் சைவசமயம் சார்வதற்கு யாதொரு இடையூறும் இல்லை வரலாமென்றதை மெய்ப்பித்தார். பொருமைக்காரர் நஞ்சு ஊட்டினலும், நீற்றறையில் இட்டாலும், யானையைவிட்டு இடறச் சொன்னலும், கல்லோடு சேர்த்துக் கட்டி கடலில்போட்டாலும் கண்ணுதற்பெருமான் கருணையிருந்தால் நீடுவாழலாமெனக் காட்டிச் சைவசமயத்தின் தனிப்பெரும் சிறப்பை நிலைநாட்டினர்.

பின்னர், திருநாவுக்கரசர் தமக்குத் தோன்ருத் துணையாக இருந்த பாதிரிப்புலியூர் அரனை வழிபட்டுத் திருப்பதிகம் பாடி வணங்கி மீட்டும் திருவதிகைத் தலத்தை அடைந்தார்; பலநாள் தங்கித் தொண்டு பல செய்துவந்தார். உண்மையுணர்ந்த மகேந்திரபல்லவன் சைவ சமயமே மெய்ச்சமயம் எனத் தெளிந்து தன் பெயரால் திருவதிகையில் குணதரேச்சுரம் என்னும் சிவாலயம் ஒன்றைக் கட்டுவித்தான். திருநாவுக்கரசர் தோன்றினர். மகேந்திரவர்மனின் மனத்தைத் திருத்திச் சைவனுக்கினர். திருக்கோயில்கள் பல கட்டுவித்தார்.

பின், பலதலங்களையும் வணங்கிக்கொண்டு, திருப் பெண்ணுகடம் என்னும் தலத்தை அடைந்து தூங் கானைமாடச் சுடர்க்கொழுந்தாகிய எம்பெருமானைத் தொழுது 'பொன்னர் திருவடிக்கொன்றுண்டு விண் ணப்பம்' என்னும் பதிகம் பாடினர். சிவபெருமான் ஆணையால் பூதமொன்று இவர்தோளில் சூலக்குறியும் இடபக்குறியும் பொறித்தது.

பின்னர், சிதம்பரம் சென்று பாமாலை பல சூட்டிச் சிலநாள் தங்கியிருந்து, சீகாழித்தலத்தை அடைந்தார். காழிப்பிள்ளையாராகிய கவுணியகுலப் பெருந்தகை திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அடியார் கூட்டத் தோடு எதிர்கொண்டு அப்பரே! வருக அப்பரே! வருக என அழைத்துவந்தார். இருவருமாகப் பிரமாபுரம் மேவிய பெருமானை வழிபட்டுச் சொன்மாலை பாடித் துதித்து வந்தனர்.

சிலநாள் கழித்து அப்பர் சம்பந்தரிடம் விடை பெற்றுக்கொண்டு சோழநாட்டுப் பிறதலங்களையும்

வணங்கிக்கொண்டு திருச்சத்தி முற்றத்தை அடைந்தார்; அங்குப் பெருமானைநோக்கித் திருவடிதீட்சை செய்தருளவேண்டும் என்று விண்ணப்பித்தார். அவ்வேண்டுகோள் இறைவனால் நல்லூரில் நிறைவேற்றப்பட்டது. அவ்வனுபவத்தை 'நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே' என்று தெரிவிக்கின்றார்.

திருவையாற்றுக்கு அணிமையிலுள்ள திங்களூருக்குப் போனார். அங்கே அப்பூதியடிகள் என்னும் அந்தணர் ஒருவர் இவர் பெயரால் சாலையும் சோலையும் அமைத்து, மாடு கன்று மக்கள் வீடு அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்ற பெயரையிட்டு வழங்கிவருதலை அறிந்தார். அவரைத் தேடிச் சென்று அவரில்லத்தில் சந்தித்தார். அப்பூதியடிகள் இவரைக் கண்டவுடன் வீழ்ந்து வணங்கித் தம் இல்லத்தில் அமுது செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அப்பரும் இசைந்தருளினார். அமுதூட்டுதற்கு வேண்டிய ஆயத்தங்கள் நிகழ்ந்தன. அமுதளிக்க இலை நறுக்கிவரும்படி மூத்த மகனை ஏவினார் அப்பூதியடிகள். சென்ற மூத்தமகன் வாழைக்குருத்தை அரியும்போது பாம்பு கடித்து இறந்தான். அப்பூதியடிகள் அடியார் அமுது செய்ய இடையூறு ஆயிற்றே என்று அஞ்சி, இறந்த தன்மகனை ஒரு பாயிற்சுருட்டிக் கொல்லைப்பக்கத்தில் வைத்துவிட்டுச் சிறிதும் மனச்சோர்வின்றி அமுது படைக்கத் தொடங்கினார்.

அப்பர்சுவாமிகள் அனைவரையும் அழைத்துத் திருநீறு அளிக்கிறபோது, மூத்த திருநாவுக்கரசு எங்கே? என்று வினவினார். அப்பூதியடிகள் உண்மையைத்

தெரிவித்தார். அப்பர்சுவாமிகள் அப்பூதியடிகளுக்கும் அவர் மனேவியார்க்கும் உள்ள அடியார் பத்தியைப் பாராட்டி, திங்களூர்ப்பெருமான் திருமுன்பு, இறந்த பிள்ளையைக் கொணரச்செய்து, 'ஒன்றுகொலாம்' என்னும் பதிகம் பாடினர். இறந்த மைந்தன் தூங்கி விழிப்பவன்போல உயிர்பெற்று எழுந்தான். எல்லோரும் உடனிருக்கத் திருவமுது செய்தனர்.

பின் பலதலங்களையும் வணங்கிக்கொண்டு அப்பர் திருப்புகலூரில் எழுந்தருளியிருந்தபோது திருஞான சம்பந்தப் பிள்ளையார் அப்பரைக் காண்பதற்காக அங்கு எழுந்தருளினர். பின், சில தலங்களை வணங்கி, திருவீழிமிழலைக்குப் போனபோது நாட்டின் பஞ்சம் தீர்க்கப் படிக்காசு பெற்றார்.

இருவருமாக வேதாரணியம் சென்றனர். வேதங்கள் பூசைசெய்து மூடிய திருக்கதவைத் திறக்கப் பாடினர். மறைக்காட்டுறையும் மணாளனின் ஆணையின்வண்ணம் திருவாய்மூருக்கு வந்தார். அங்கே இருவருக்கும் சிவபெருமான் காட்சிதந்தார். மீண்டும் வேதாரணியம் சென்று, திருஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்ற பின்பு திருநாகைக்காரோணம் முதலான தலங்களை வழிபட்டுப் பதிகச்சொன்மாலை பாடிப் பரவிப் பழையாறை வடதளிக்கு வந்தார். அங்கே சமணர்கள் சிவாலயத்திலுள்ள சிவலிங்கத்தை மறைத்துத் திருக்கோயிலைச் சமணப்பள்ளியாக்கினர். இதனை உணர்ந்த அப்பர்பெருமான் சிவலிங்கம் வெளிப்பட்டாலொழிய உணவு உண்ணேன் என்று விரதம்பூண்டார். இறைவன் சோழமன்னன் கனவில் சென்று, அப்பர்

நிலையை உணர்த்தினார். மன்னன், மறுநாளே சமண் பள்ளியை அகற்றிச் சிவலிங்கத்தைத் தரிசிக்கப்பண்ணினான். அப்பர்பெருமான் பதிகம் பாடி வழிபட்டு, திருப்பைஞ்ஞீலி அடைந்தார். வழியில் நல்லவெயில். பசி தாகம் இவற்றால் வருந்திச் சென்றார். அப்போது ஆரணீயவிடங்கர் அந்தணவடிவங்கொண்டு சோறும் நீரும் தந்து களைப்பை அகற்றி மறைந்தார். இதனைக் கண்ட அப்பர் இறைவன் அருளை வியந்து பதிகம் பாடிப் பரவினார்.

வடநாட்டுத் தலங்களையும் வழிபட எண்ணினார். திருவண்ணாமலை முதலிய தொண்டைநாட்டுத் தலங்களை வழிபட்டுத் திருக்காளத்தியை அடைந்தார். அங்கிருந்து கயிலையை வழிபட எண்ணி வடதிசை நோக்கி அடியார்கூட்டத்தோடு காசிவரை சென்றார். மேலும், கயிலையைநோக்கிச் செல்லவிரும்பினார். கூட வந்தவர்களை அங்கே இருக்கப் பணித்தார். தம் உடல் வழிநடைக்கு ஒவ்வாத தளர்ச்சி அடைந்திருந்தும், அதனைப் பொருட்படுத்தாது மேலும் நடந்துசென்றார்.

கையும் காலும் தேய்ந்து சிதைந்தன. உடல் தளர்ந்தாலும் அவர் உள்ளம் தளரவில்லை. மார்பால் நகர்ந்து சென்றார். மார்பும் தேய்ந்து மேலே போக இயலாது வழியில் மயங்கிக் கிடந்தார். கருணைவடிவான கயிலாயபதி இவர் உறுதியையும் ஊக்கத்தையும் உடல்நிலையையும் திருவுள்ளத்திலெண்ணி, ஒரு முனிவர் வடிவங்கொண்டு இவரெதிரேவந்து 'அப்பரே! திருக்கயிலை மானிடர் காணும் தகையதன்று; வீணான ஆசை வேண்டாம்; நீர் திரும்புவதே முறை' என்று கூறினார்.

பூதம் ஐந்தும் நிலையிற்கலங்கினும் நெஞ்சம் கலங்காத அப்பர் முனிவர்பெருமானே! இவ்வுடல் என்ன? நிலையானதா? அழிவதுதானே! ஆளுடைய நாயகன் கயிலை கண்டலல்லது நான் மீளேன்; இது உறுதி என்று உரைத்தார். கேட்டதும் முனிவர் அசரீரியாக அப்பரே எழுந்திரும் என்று பணித்து மறைந்தார். அப்பர் பெருமான் எழுந்தார்; தேய்ந்துபோன தம் கைகால்கள் வளர்ந்து பண்டைய நிலையில் இருப்பதைக் கண்டார்; வியந்து, வந்தவர் பெருமானே என்று பரவசப்பட்டு, இறைவனே! அடியேன் கயிலையில் அம்மையோடு உம்மைத்தரிசிக்க அருள்புரிக என வேண்டினர்.

பெருமான் வெளிப்பட்டு, அங்கிருந்த ஒரு குளத்தைக்காட்டி, நீர் இதில் முழுகினல் கயிலை காணலாம் என்ருர். அப்பர் முழுகியதும் திருவையாற்றிலுள்ள திருக்குளத்தில் எழுந்திருக்க அருள்புரிந்தார். அப்பர் திருவையாற்றுத் திருக்குளத்தில் எழுந்ததும், திருக்கோயிலே திருக்கயிலையாகவும், அங்குள்ள உயிர்கள் யாவும் அம்மையப்பராகவும் காட்சிவழங்கின. ஆகவே அப்பர் தோன்றினர். வடகயிலைக் காட்சியைத் தென் திருவையாற்றிலே கண்டு அனைவருக்கும் காட்டினர்.

சிலநாள் தங்கியிருந்து காவிரிக்கரையிலுள்ள பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருப்பூந்துருத்தியில் ஒரு திருமடம் அமைத்து அதில் தங்கியிருந்தார். அப்போது, மதுரை சென்று சமணரை வாதில் வென்று சைவப் பேரரசை நிலைநாட்டிய திருஞானசம்பந்தப் பெருமான் சோழநாடு திரும்பி அப்பரைக்காணவேண்டும் என்ற அவாவால் திருப்பூந்துருத்தியை அடைந்தார். அவரை எதிர்கொண்டழைக்க விரும்பி வந்த

அப்பர் ஞானசம்பந்தப்பெருமான் பல்லக்கைச் சுமப்பவர்களோடு தாமும் ஒருவராகக் கலந்து சுமந்தார். ஞானசம்பந்தப்பெருமான் அப்பரைக் காணுது, எங்கே அப்பர்? எங்கே அப்பர்? என்று ஆவலோடு வினவினுர். அப்பர்சுவாமிகள், 'உம்மடியேன் நும்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு எய்தப்பெற்று இங்கு உற்றேன்' என்ருர். ஞானசம்பந்தப்பெருமான் இதனைக்கேட்டுப் பதைபதைத்துக் கீழே இறங்கிவந்து அப்பரை வணங்கினுர். அப்பர்சுவாமிகளும் எதிர்வணங்கினுர். இருவருமாகச் சென்று பூந்துருத்தி மேய புனிதனுரை வழிபட்டுத் திருமடத்தில் இருக்கின்றபோது, பாண்டிய நாட்டு நிகழ்ச்சிகளைச் சம்பந்தர் வாயிலாகக் கேட்டு அறிந்துகொண்டு தாமும் பாண்டியநாடு சென்று பல தலங்களையும் வணங்கினுர்.

பின்பு சோழநாட்டிற்குத் திரும்பிவந்து திருப்புகலூரிலே கைத்தொண்டும் சொற்ருெண்டும் புரிந்து எழுந்தருளியிருந்தார். அங்கு ஒருநாள் அப்பர்சுவாமிகளுடைய உண்மைத்துறவை உலகினுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இறைவன் அப்பர் உழவாரப்படை வைத்த இடமெல்லாம் பொன்னும் மணியுமாகத் தோன்றச்செய்தார். அப்பர்சுவாமிகள் அவற்றை ஓடும் கல்லும்போல எண்ணி வீசியெறிந்தார். பின்பு ஒருநாள் அரம்பையர்கள் இவர்முன்னே தோன்றி ஆடல் பாடல் புரிந்தனர். அப்பர்சுவாமிகள் 'பொய்ம்மாயப் பேய்காள் அகலப்போமின்' என்று அதட்டிஓட்டினுர்.

இவ்வண்ணம் மண்ணுசை பெண்ணுசை பொன்னுசைகளைத் துறந்து உண்மைவாழ்வாகிய சிவவாழ்வு வாழ்ந்த அப்பர், இனி இம்மண்ணுலகில்வாழ விருப்ப

மின்றிப் பூம்புகலூர் மேவிய புண்ணியனே! உனது பொன்னடிக்கே போத விரும்புகிறேன் என்றருள்க என வேண்டினர். பெருமானும் அவ்வாறே ஒரு சித்தரை மாதத்துச் சதயநாளிலே அப்பரை அழியாத பெருவாழ்வளித்து ஏற்றுக்கொண்டார்.

இங்ஙனம் அப்பர் தோன்றினர்; புறச்சமயம் போந்து, அகச்சமயம் வந்து, பகைவர் சூழ்ச்சிக்குத் தப்பி, இறைவனருளால் சூலமுத்திரையும் இடபமுத்திரையும் பொறிக்கப்பெற்று, திருவடிசூட்டப்பெற்று, மூத்த திருநாவுக்கரசின் விடம்போக்கி உயிர்கொடுத்து, படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கி, வேதங்கள் சாத்திய கதவைத் திறந்து, திருவையாற்றில் திருக்கயிலையைக் கண்டு, தமிழ்நாடு முழுதும் சிவமணம் கமழும் திருத்தாண்டகம் முதலான பல பதிகங்களைப் பரப்பிப் பேரானந்தப் பெருவாழ்வு எய்தினர்.

## சுந்தரர்பெருமான் தோன்றினர்

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதிசைவ அந்தணர் குலத்திலே சடையனார்க்கும் இசைஞானியர்க்கும் மகவாகத் தோன்றினர் ஆலாலசுந்தரர். பல கலைகளையும் கற்றுத்தேறிய இவருக்கு உரிய பருவத்தில் பெற்றோர் திருமணம் செய்விக்க முயன்றனர். திருமணநாள் வந்தது. உற்றாரும் உறவினரும் கூடியிருக்கிறார்கள். திருமணத்திற்குரிய முதற்சடங்குகள் யாவும் முடிந்தன. திருமணப்பந்தரில் வயது முதிர்ந்த அந்தணர் ஒருவர் தோன்றினர். அவர் முதுமையே வடிவங்கொண்டு வந்ததுபோன்ற உருவத்தையுடையவர். தலை முழுதும் நரை. உடம்பெல்லாம் தோல்

சுருங்கித் தளதள என்று தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆனாலும், இளமையில் பேரழகு படைத்தவராக இருந் திருப்பார் என்பதை அவர் மேனியில் தவழும் கவர்ச்சி காட்டிக்கொண்டிருக்கிறது. வந்தவரை எல்லாரும் இவர் யார்? புதியவராக இருக்கிறாரே என்று திறந்த வாய் மூடாமல் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். வந்தவர் சும்மா இருக்கவில்லை. இந்த நாவலூரன் எனக்கு வழிவழி அடிமை; இவன் எனக்குத் தொண்டு செய்தல் வேண்டும்; என் அனுமதி இல்லாமல் இவன் திருமணம் செய்துகொள்ளுதல் கூடாது என்றனர். இருந்தவர்கள் இது என்ன ஐயா! சைவ அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமை என்பதை உலகத்தில் எங்கும் கண்டதே இல்லையே என்று கேட்டனர். நம்பி யாரூரர், இவன் ஒரு பித்தனாக இருப்பான்போலே யிருக்கிறது; விடுங்கள் இவன் பேச்சை; மேலே நடக்க வேண்டியது நடக்கட்டும் என்றார்.

வந்த அந்தணர் நான் பித்தனாகட்டும் பேயனாகட் டும்! அதைப்பற்றிய பேச்சு இங்குவேண்டாம்; இவன் என் அடிமை; வேலைசெய்ய வரட்டும்; திருமணம் அப்புறம்; இது உறுதி என்றார்.

நம்பியாரூரர்: அப்படியானால் உம் பேச்சுக்கு ஏதாவது ஆதாரம் உண்டா?

முதியவர்: ஓ இருக்கிறதே! உன் அப்பாவின் அப்பா எழுதிக்கொடுத்த அடிமை முறி.

ஆரூரர்: அப்படியானால் காட்டும் பார்க்கலாம்.

முதியவர்: இதோ!

ஆரூரர் : ஆமாம் ஓலையாம் ஓலை ! பாருங்கள் ஐயா ! (கிழித்தெறிகிறார்.)

முதியவர் : சபையோர்களே ! பாருங்கள்; ஓலையைக் கிழித்துவிட்டான் ; ஆகையால் இவன் எனக்கு அடிமைதான் என்பதை நிரூபித்துவிட்டான்.

சபையோர் : சுவாமிகளே ! தாங்கள் எந்த ஊரோ ?

முதியோர் : இதோ திருவெண்ணெய்நல்லூர்.

சபையோர் : அப்படியா ! அங்கேயே போய் அங்கு உள்ள சபைமுன்பே இவ்வழக்கைத் தீர்ப்போம் வாருங்கள்.

முதியோர் : மிக நல்லது ! வாருங்கள்.

எல்லோரும் போகின்றனர். திருக்கோயில் வாயிலுள்ளே போகின்றனர். சபைமுன் ஊர்கூட்டி, பஞ்சாயத்துச் சொன்னார்கள்.

சபையோர் : இதென்ன ஐயா ! ஆச்சரியம் ; பிராமணன் பிராமணனுக்கு அடிமையா ? இதுவரை நாங்கள் கேட்டதில்லையே !

முதியோர் : இவன் கிழித்தது நகல் ஓலை ; இதோ இருக்கிறது மூலவோலை பாருங்கள் ; அதற்குப் பிறகு சொல்லுங்கள்.

சபையோர் : (வாங்கிப்பார்த்து) சடையனாரே ! இது உங்கள் தந்தையின் தந்தையினது கையெழுத்துத் தானா பாருங்கள் !

சடையனுர் : எனக்குத் தெரியாது; ஆனுல், அவர்கள் கையெழுத்து வேருென்று இருக்கிறது. இதோ கொண்டுவருகின்ருேம் ; ஒத்திருக்கிறதா என்று பார்ப்போம்,

சபையோர் ; இருந்தால் கொண்டுவாருங்கள்.

சடையனுர் : இதோ ! பாருங்கள்.

சபையோர் : (கூர்ந்து நோக்கி) அவர் கையெழுத்தே தான் சந்தேகமில்லை.

நாவலாரூரரே ! நீரும், உமது முன்னேரும் வழிவழி அனைவரும் இவருக்கு அடிமைதான் ; இவர் சொன்னபடி கேட்பதுதான் உமது கடமை ; சம்மதந்தானே !

ஆரூரர் : சபையின் கட்டளைப்படி நடப்பேன்.

சபையோர் : (வேதியரை நோக்கி) பெரியவரே உமது ஓலையில் இதே ஊர் என்று குறித்திருக்கிறதே! தங்கள் வீடு எதுவோ ?

வேதியர் : இத்தனைப் பெரியவர்கள் இருக்கிறீர்கள்; ஒருவருக்காவது என் வீடு தெரியாதா? வாருங்கள் காட்டுகிறேன்.

இப்படிச் சொல்லி அழைத்துக்கொண்டு போன வேதியர் திருவருட்டுறையுள் புகுந்தார் ; மறைந்தார். சபையோர் இதென்ன ஆச்சரியமாக இருக்கின்றதே! வந்தவரைக் காணேமே! என்று வியந்துநின்றனர்.

ஆரூரர் தொடர்ந்துசென்று ஐயா! ஐயா! எங்கேயிருக்கிறீர் என்று அழைக்கிருர்.

பெருமான் உமாதேவியாரோடு இடபாரூடராகக் காட்சிதந்து, திருக்கயிலையில் வேண்டிக்கொண்டபடி உம்மைத் தடுத்தாட்கொண்டோம்; எமக்குப் பணி செய்யும்; நம்மை அருச்சித்தல் பாடுதலே; ஆதலால் தலங்கள்தோறும் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடும் எனப் பணித்தார்.

ஆரூரர் ; பெருமானே! என்னவென்று பாடுவேன்.

பெருமான் : நீ நம்மைப் பித்தன் என்று வைதமை யால் பித்தா எனத் தொடங்கிப்பாடுக.

ஆரூரர் மனங்குழைந்து,

பித்தாபிறை சூடிபெரு மானே அரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
[நல்லூர்அருட் டுறையுள்
அத்தாஉனக்(கு) ஆளாயினி அல்லேன்என லாமே.

எனப் பாடினர்.

நம்பியாரூரர் தோன்றினர்; இறைவனே வந்து தடுத்து ஆட்கொள்ளப்பெற்றார். மணப்பருவமான காளைப்பருவத்திலேயே கடவுளைக் காணும் பேறு பெற்றார். நாவலர் காவலரானார். பதிகச்சொன்மாலை பாடும் பரிசுபெற்றார்.

இவ்வண்ணம் பாடும் பரிசுபெற்ற ஆரூரர் சிதம்ப ரத்திற்குச் செல்கின்றபோது, வழியில் திருவதிகைக்கு அணிமையிலுள்ள சித்தவடமடத்தில் தங்கினர். நித் திரை செய்தார். அப்போது இறைவன் கிழவேதியராக

வந்து திருவடிதீட்சை செய்தருளினர். நம்பியாரூரர் தம் முடிமீது திருவடிசூட்டியருளியவர் இறைவனே என்பதை அறிந்து 'தம்மானை யறியாத சாதியாருளரே' என்ற பதிகம் பாடித் தமக்குச் சாதிப்பற்றும் தகர்ந்தமையை விண்ணப்பித்தார்.

பின்னர், திருமாணிகுழி முதலிய பல தலங்களையும் வணங்கிக்கொண்டு தில்லையை அடைந்தார். ஆனந்தக் கூத்தப்பெருமானை ஐந்துபேரறிவும் கண்களேகொள்ள எல்லையிலானந்தப் பெருங்கூத்தைக் கண்டு வணங்கிப் பதிகச்சொன்மாலை பகர்ந்தார். அப்போது நடராசப் பெருமான், அசரீரியாகத் 'திருவாரூருக்கு வா' என்று ஆணை தந்தார். அவ்வாறே வழிக்கொள்கின்றவர்கள் சீகாழி முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூர் எல்லையை அடைந்தார்.

அங்கே அடியார்கள் தியாகப்பெருமான் அருளிய வண்ணம் இவரை எதிர்கொண்டு அழைக்க வந்தனர். அவர்களோடு திருவீதி வழியாகச் செல்கின்ற ஆரூரர் 'கரையுங்கடலும்' என்னும் பதிகம் பாடிக்கொண்டே சென்று திருக்கோயிலையடைந்து, தேவாசிரியம் எனும் ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள அடியார்களையும் வணங்கிக்கொண்டு, பூங்கோயிலை அடைந்து வன்மீக நாதரை வணங்கினர். வன்மீகநாதரும் நீ கொண்ட மணவாளத் திருக்கோலத்துடன் என்றும் விளங்குவாயாக; இன்று முதல் நீ நமக்குத் தோழன்; ஆதலால், தம்பிரான்தோழன் என்ற பெயரும் வழங்குக எனப் பணித்தார். திருவாரூரில் எழுந்தருளியிருந்தபோது பெருமான் திருவருளால் உருத்திரகணிகையர்குலத்து உதித்த பரவையாரை மணந்து வாழ்ந்துவந்தனர்.

ஒருநாள் திருக்கோயிலுக்குச் செல்கின்றபோது தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களைக் கண்டு அன்பு மிகுந்து இத்தகைய அடியார்களுக்கு அடியனாகும் புண்ணியம் நமக்கு என்று கிடைக்குமோ என்று எண்ணிக்கொண்டே திருக்கோயிலுக்குச் சென்றார். பெருமான் அசரீரியாக 'தில்லைவாழந்தணர் தம்' என அடியெடுத்துக் கொடுத்து அடியார்களைப் பாடுக எனப் பணித்தார். அவ்வாறே திருத்தொண்டத் தொகையை இயற்றி அறுபத்துமூன்று அடியார்களின் பெருமையை உலகு அறியச்செய்தார்.

'நீள நினைந்தடியேன்' என்ற பதிகம் பாடி, குண்டையூர்க்கிழார் பெற்ற நெல்மலையைச் சிவபெருமான் ஆணையால் பூதங்களைக்கொண்டு ஆரூருக்குக்கொண்டு வந்துசேர்த்தார். திருநாட்டியத்தான்குடியிலே வாழ்ந்த கோட்புலியார் என்பவர் தம் பெண்கள் இருவரையும் மணந்துகொள்ளவேண்டிக்கொண்டபோது இவர்களை நம் மக்களாக ஏற்றோம் என்று ஆசிகூறித் தம் பதிகத்தில் பல இடங்களில் வனப்பகை சிங்கடியப்பன்என்று பாராட்டி மகிழ்ந்தார்.

ஒரு முறை திருப்புகலூருக்குச் சென்றபோது 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்' என்னும் பதிகம் பாடிச் செங்கற்களைப் பொன்னாகப்பெற்றுப் பங்குனி உத்திரத்திருநாட்செலவிற்குப் பயன்படுத்தினார்.

பின்னர், பல தலங்களையும் வணங்கிக்கொண்டு விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றிற்குப் போகும் போது நடுவழியில் தாமும் பாடல்பெறும் விருப்பால் கூடலையாற்றூர் இறைவனே பிராமணச் சிறுவராக

வந்து வழிகாட்டிச் சென்று திருக்கூடலையாற்றூரில் விட்டார். அங்குள்ள பெருமானை வணங்கிக்கொண்டு திருமுதுகுன்றம் அடைந்தார். அங்கு இறைவன் பன்னீராயிரம் பொன் தர, அவற்றை மணிமுத்தாநதியில் இட்டு, திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துப் பரவையாருக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

பின்னர்த் தொண்டைநாட்டுத் தலங்களையும் வழிபட எண்ணித் திருக்கழுக்குன்றம் முதலான தலங்களை வழிபட்டுக்கொண்டு திருக்கச்சூர்பக்கம் வரும்போது இறைவனே இவருடைய பசிக்கொடுமையை அறிந்து பிச்சை எடுத்துவந்து அன்னம் படைத்தார். இவர் உண்டபின் அவர் மறைந்தார், நம்பியாரூரர் வியந்து 'முதுவாயோரி கதற' என்னும் பதிகம்பாடி அதில் 'அடியார் இருக்க ஐயங்கொள்வது அழகிதே' என்று வியந்து பாராட்டித் துதித்தார்.

பின்னர்க் காஞ்சிபுரம் முதலான தலங்களை வணங்கிக்கொண்டு திருவொற்றியூர் வந்து சேர்ந்தார். அங்கு வசிக்கும் நாளில், பரமனுணை கூட்டச் சங்கிலியார் என்னும் வேளாளப்பெண்ணைக் கண்டு காதலித்தார். இறைவன் அருளாணை வண்ணம் மகிழமரத்தடியில் சபதம் செய்து கொடுத்து மணந்துகொண்டார். பின் திருவாரூர் பங்குனி உத்திரத்திருநாள் நினைவுக்குவர, 'பத்திமையும் அடிமையையும்' என்ற பதிகம் பாடிக்கொண்டே சபதத்தைமீறித் திருவாரூரை அடைவதற்காகத் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டினர். இவருடைய கண்கள் மறைந்தன. வருந்தி வழிநடந்து திருமுல்லைவாயிலைக் கடந்து திருவெண்பாக்கம் வந்தபோது கண்ணிழந்து வழிநடக்க வருந்தி, 'திருக்கோயி

லுள்ளீரோ' என்று பாட, இறைவன் ஊன்றுகோல் ஒன்றுகொடுத்து 'உளோம்போகீர்' என்றனர். திருவாரூருக்கு வரும் வழியில் காஞ்சிபுரம்வந்து இடக்கண் பார்வை பெற்றுக் 'கள்ளக் கம்பனைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே' என்று பாடினர். வழியிலுள்ள தலங்களையும் வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்து வலக்கண் பார்வையும் பெற்றார். தியாகப் பெருமானை வணங்கிப் பரவையார்வீட்டுக்குப் போக விரும்பினர்.

பரவையார் ஆரூரர் ஒற்றியூரில் சங்கிலியாரை மணந்த செய்தியைக் கேள்வியுற்று ஊடல் உற்றனர். இதனை அறிந்த சுந்தரர், தோழனாகிய பெருமானிடம் விண்ணப்பிக்க, அவரே இருமுறை தூதுசென்றனர்; ஊடல் தணித்தனர்.

இந்த நிகழ்ச்சியை அவ்வூரில் வாழ்ந்த ஏயர்கோன் கலிக்காமர் என்ற அடியாரும் கேள்வியுற்றார். என்ன! இறைவனைத் தூது அனுப்புவதா! எவ்வளவு தகாத காரியம்? என்று சுந்தரர்மீது கோபமுற்றிருந்தார்.

இறைவன் ஏயர்கோன் கோபத்தைப் போக்கிச் சுந்தரரோடு நட்பாக விளங்கச்செய்யவேண்டும் என்று எண்ணி ஏயர்கோனுக்குச் சூலைநோயைக் கொடுத்தார். நம்பியாரூரரை அங்குச் சென்று நோயைப் போக்கும்படிப் பணித்தார். ஏயர்கோன் சுந்தரரைப் பார்ப்பதா ? நான் மாட்டேன் என்று உடைவாளால் வயிற்றைக் கீறிக்கொண்டு இறந்தார். சுந்தரரும் இதுகண்டு தாமும் இறக்க எண்ணுதலும் இறைவன் கலிக்காமரை எழச் செய்து இருவரையும் நட்பாக்கினர்.

இவ்வண்ணம் சுந்தரர்பெருமான் வாழ்ந்துவருங் காலையில் சேரமான்பெருமாள் இவர் பெருமையைச் சிற்சபேசன் திருவருளால் உணர்ந்து இவரைக் காண்ப தற்காகத் திருவாரூர் வந்தார். சுந்தரர்பெருமான் சேர மன்னரை வரவேற்றுத் தியாகப்பெருமானை வழிபட்டு, சேரனுடன் சேரநாட்டிற்குச் செல்கிறபோது வழியில் திருவையாற்றை அடைந்தனர். அங்குக் காவிரியில் பெருவெள்ளம். கடந்து செல்ல முடியாதநிலை. அப்போது ஆற்றுநீர் மேல்பக்கம் தானே தேங்கிநின்று வழி விட்டது. இவர்கள் சென்று வணங்கிச் சேரநாட்டிற் குப்போய்ச் சேரமான்பெருமாளின் விருந்தினராகச் சில காலம் இருந்து பின்பு திருவாரூரை அடைந்தார்.

சில நாள் கழித்துக் கொங்குநாட்டுத் தலங்களை வணங்க எண்ணி, அவிநாசியை அடைந்தபோது அங்கு ஒரு வீட்டில் அழுகை ஒலியும், ஒரு வீட்டில் திருமண முழக்கமும் கேட்க உடன்வந்த அடியார்களை நோக்கி 'இது என்ன' என்று வினவ, அவர்கள் நிகழ்ச்சிகளைச் சொல்ல, மனம் இரங்கிப் பெருமானைப் பாடி, முதலை உண்ட பாலகனை மீட்டுக் கொடுத்தனர்.

சேரமான்தந்த பொருள்களோடு திருவாரூருக்குத் திரும்பி வருகிறபோது திருமுருகன்பூண்டிக்கு அணு மையில் வந்தார். திருமுருகன்பூண்டி இறைவன், நம் தோழர்க்குக்கொடுக்க நாம் இருக்கும்போது சேரமா னிடத்து இவர் பெறலாமா? என்ற திருவுளத்தாற் போலும், தமது பூதகணநாதர்களை வேடுவர்களாக்கிப் பொருளைப் பறித்துவரச்செய்தார். சுந்தரர்பெருமான் 'கொடுகுவெஞ்சிலைப்' பதிகம்பாடி இழந்தபொருளைத்

திரும்பப்பெற்றனர். திருவாரூருக்கு எழுந்தருளிச் சில காலம் தியாகப்பெருமானை வழிபட்டு வாழ்ந்துவந்தார்.

மீண்டும் ஒருமுறை சேரநாடு சென்று திருவஞ்சைக்களத்தை அடைந்து சிவதரிசனம்செய்து வலம் வருகையிலே, இவ்வுலகவாழ்வு வேண்டாம் திருக்கயிலையில் உடன் இருக்கும் வாழ்வேவேண்டும் என்ற உள்ளக்குறிப்போடு 'தலைக்குத் தலைமாலை' என்னும் பதிகத்தைப் பாடினார்.

இறைவன் வெள்ளையானையை அனுப்பி இவரை அழைத்துவரச் செய்தனர். இதுகேட்ட சேரமான் பெருமாள் ஒருகுதிரையின்மீது ஏறி, அக்குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை ஓதிக் கயிலாயத்திற்குச் சென்றனர். பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியும் அநிந்திதையுமாகித் திருக்கயிலை அடைந்தனர். சுந்தரர்பெருமான் இறைவனனுப்பிய வெள்ளை யானையின்மீதமர்ந்து 'தானெனை முன் படைத்தான்' என்னும் பதிகத்தை விண்ணப்பித்துக்கொண்டே திருக்கயிலையை அடைந்தனர். வருணன் சுந்தரர்பெருமான் ஆணையின்வண்ணம் அப்பதிகத்தை அஞ்சைக்களத்தப்பர்க்கு அறிவித்தான்.

இவ்வண்ணம் சுந்தரர் தோன்றினர்; சிவயோக நெறியே சிவனருளைப்பெற எளியநெறி என உணர்த்தினர்; இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றார்; இறைவனை நண்பராகப்பெற்றார்; இறைவனிடமிருந்து பொன் பெற்றார்; புகழ்பெற்றார்; போகமும் பெற்றார்; எல்லாம் பெற்றுச் சிவயோக வாழ்வு வாழ்ந்தார்; எடுத்த இவ்வுடலோடே திருக்கயிலைசென்று பெருமானுக்கு அணுக்கத்தொண்டராக அமர்ந்திருக்கின்றார்.

## மாணிக்கவாசகர் தோன்றினர்

கி. பி. மூன்ரும் நூற்ருண்டு முதல் ஒன்பதாம் நூற்ருண்டுவரை புனிதமான காலம்; நாட்டிலே பல வேறு சமயவாதங்கள் கிளம்பிச் சுழற்றியடித்த காலம். உறுதியான உள்ளம் படைத்தவர்களும் காற்றிற் சிக்கிய விளக்குப் போலக் கருத்துத் தடுமாறியகாலம். அக்காலத் தேவை ஆசாரியப் பெருமக்களாகிய வழி காட்டிகளை உதவும்திருவருளை வேண்டிநின்றது.

பௌத்தவாதம் வீசிய காலத்திலே - மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதம் சுழித்தடித்து ஆர்த்த காலத்திலே திருவாதவூரிலே அமாத்திய பிரா மணகுலத்திலே தோன்றினர் மணிவாசகர்.

உரிய காலத்தில் எல்லாக்கல்வியும் நிரம்பப்பெற் ருர். இவருடைய நல்லொழுக்கமும் கல்வியும் இவரை நாடறியச் செய்தன. அரசன் அரிமர்த்தனபாண்டியன் இவரை முதன்மந்திரியாக்கிக்கொண்டான். அமைச்ச ருக்கு உரிய சீரும் சிறப்பும் கொடுத்தான். ஆனலும், கூத்தினர் தன்மை வேறு கோலம் வேருகுந்தன்மை போல, பதவிக்கேற்ப ஆடையணிகளாலும் செயலா லும் அமைச்சராகத்தான் விளங்கினர். மனம் இதில் ஈடுபடவேயில்லை. நமக்கு எப்போது ஞானசாரியன் கிடைப்பான்? எங்குக் கிடைப்பான்? சிவஞானம் பெறலாம்; சிந்தை தெளியலாம்! என்பதே கவலையாகக் கொண்டு நடந்து வந்தார். அரசன் குதிரை வாங்கக் கீழக்கடற்கரைக்கு அனுப்பினன். பரிவாரஞ்சூழ வாதவூரரும் திருப்பெருந்துறையை அடைந்தார்.

காந்தம் இழுத்தது; அங்கே அரஅர முழக்கம் கேட்டது. ஒலி உள்ளத்தைப் பிணித்து இழுத்தது. ஒலிவந்த திசையே ஓடினார். அங்கே ஓர் அருட்காந்த மலை, குருந்தமரத்தடியில் குருநாதர் வடிவில் இருந்தது. அதனைச்சூழ ஆயிரக்கணக்கான பேர்கள் மெய்ம் மறந்து அம்மலையையே நோக்கியிருக்கின்றனர். அவர்கள் அத்தனை பேரும் விழித்தகண் குருடாக இருக்கின்றார்கள். இந்நிலையைக் கண்டவுடன் வாதவூரர் தன்னை மறந்தார். இவர் கைகள் சிரமேற்குவிந்தன. காந்த மலையைக் கண்ட இரும்பு போலக் குருநாதனை அணுகினார். ஆகா என்ன அழகு! எவ்வளவு அருள்! இப் பெருமானைக் காணக் கொடுத்துவைத்தோமே என்கிற ஆனந்தம் அகத்தில் நிறைந்தது. கண்களில் ஆனந்த நீர் ததும்பி வழிகிறது, அடியற்ற மரம்போல வீழ்ந்து குருமணியே! அடியேனைக் காப்பாற்றவேண்டுமென்று வேண்டுகிறார்.

குருநாதர் பார்வை இவர்மீது விழுந்தது. அப்பா வா அருகே வா என்று அழைத்தார் குருநாதர். இவருடைய சிரத்தில் தம் வலக்கையை வைத்து இவருடைய மல மாயா கன்மங்கள் ஒழிவனவாக; இவன் சிவஞானியாக விளங்குக எனத் திருவுளம்பாலித்தார். சங்காரமுத்திரையால் இவரான்மாவை எடுத்துத் தம்மோடு சேர்த்தித் தூய்மைசெய்து ஞானதீட்சை செய்தார். அவ்வளவுதான் அமைச்சர் வாதவூரர் அன்புப் பாடலைப் பாடும் மாணிக்கவாசகரானார். குருத்தோத்திரமாகப் பல பாடல்கள் வெளிவந்தன.

கொண்டுவந்த பொருள்கள் அனைத்தையும் குருமூர்த்திக்கே அளித்தார். 'அன்றே என்றன் ஆவியும்

உடலும் உடைமை எல்லாமும், குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ' என்று வியந்து போற்றினர். உடல்முழுதும் வெண்ணீறு பூசிக் கோவண ஆடைமட்டும் உடுத்தி உண்மைத் துறவியானர். அவர் திருப்பெருந்துறையிலேயே தங்கி விட்டார்.

அரசன் ஒற்றர்களால் இதனை அறிந்தான். உடனே புறப்பட்டுவருக என மணிவாசகருக்குத் திருமுகம் அனுப்பினன். குருநாதன் ஆணையின்வண்ணம் சென்ற மாணிக்கவாசகர் குருநாதர் கூறியவண்ணம், ஆவணி மூலத் திருநாளில் குதிரைகள் வருமென்று அரசனிடம் அறிவித்தார். அரசனும் மகிழ்ந்திருந்தான். கூறிய ஆவணிமூலம்வந்தது; ஆனல் குதிரைகள் வரவில்லை. இதுகண்ட அரசன் கோபமுற்று மாணிக்கவாசகரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தினன். மன்னன் கொடுக்கும் தண்டனைகள் மாணிக்கவாசகரைத் துன்புறுத்தில. அவர் சித்தத்தைச் சிவன்பாலே வைத்து, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே என்ற மனவுறுதியோடிருந்தார். ஆவணிமூலத்தன்று காலை ஆறுமணி. ஊரெங்கும் ஒரேபுழுதிமயம். என்ன என்று அரசன் விசாரிக்கச்செய்தான். ஏவலாளிகள் குதிரை வெள்ளம் கரை புரண்டு வருகிறது; ஆகா என்ன அழகான குதிரைகள் என்று ஓடிவந்து சொன்னர்கள்.

அரசன் மனம் மகிழ்ந்து மணிவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து, அமைச்சர் பெருமானே! தங்கள் பெருமை அறியாது தவறு செய்துவிட்டேன் மன்னியுங்கள் என்று வேண்டிக்கொண்டான்.

அன்று பொழுதுபோயிற்று; மாலைக்காலம் வந்தது. மதியம் வானில் எழுந்தது. குதிரைக்கொட்டிலிலிருந்த குதிரைகள் எல்லாம் நரிகளாயின. வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அடித்துக்கொண்டுபோனது போல வந்த நரிக் குதிரைகள், இருந்த உண்மைக் குதிரைகளையும் கடித்தும் தின்றும் கொன்றன. ஊர் அல்லோலகல்லோலப்பட்டது; காவலர்கள் அரசனிடம் தெரிவித்தனர். அரசனுக்குக் கடுங்கோபம். கொண்டு வாருங்கள் அமைச்சரை, மதியத்தில் வையையாற்று மணலில் நிறுத்தி முதுகில் சுடுசெங்கல்லை வையுங்கள் என்று காவலாளிகளிடம் கட்டளையிட்டான். காவலாளிகள் அமைச்சரைப் பிடித்து இழுத்துச்சென்று அவ்வாறே செய்தனர்.

அடியார்படும் துயரத்தைக்கண்டு பொறுத சிவபெருமான் திடீரென வையையில் வெள்ளம் பெருகச் செய்தார். எங்கும் வெள்ளம். வையை உடைப்பு எடுத்தது. ஊரெங்கும் வெள்ளக்காடாயிற்று. குடிகள் ஓடிவந்து கூறினர். அமைச்சர்கள் அரசே! இவ்வெள்ளம் நம் முதல் அமைச்சருக்கு நாம் கொடுத்த தண்டனையைப் பொறுக்காமல் இறைவன் கட்டளையால் வந்ததாகும்; ஆதலால், அவரை விடுதலைசெய்து, அவர் வாயிலாகவே வெள்ளத்தை வடியும்படி வேண்டிக் கொள்ளவேண்டும்; இதுவே முறை என்றனர். அரசனும் அவ்வாறே செய்தான். வையைப் பெருக்குக் குறைந்தது. ஆனாலும், கரை உடையாதபடி ஊர் மக்கள்அனைவரையும் அங்கங்கே கரையை அடைத்துக் கொள்ளவேண்டும் என்று உத்தரவிட்டான். எல்லாரும் அடைத்து விட்டார்கள். ஒரு ஏழைப் பிட்டு வாணிச்சி; வந்தி என்பவள். அவள் பங்குமட்டும்

அடைபடவில்லை. சொக்கலிங்கப்பெருமான் ஒரு கூலி ஆளாக வந்தார். அவள் தந்த பிட்டைக் கூலியாகப் பெற்று அடைக்கத் தொடங்கினர். ஒரு கூடை மண் கொட்டுவார்; உறங்குவார்; போட்ட மண்ணும் பக்கத்துப் பங்கும் அறுத்துக்கொண்டுபோகும். இங்ஙனம் விளையாட்டுப் புரிந்தார். ஏவலாட்கள் இதைப் பார்த்து அரசனிடம் தெரிவித்தனர். அரசனும் வந்து பார்த்தான். வந்தியாளைப் பிரம்பாலடித்தான். பிரம்படி அடித்த அரசன் முதுகிலும் விழுந்தது. இருந்தவர்கள் அத்தனை பேரும் ஐயோ ஐயோ அடி என் முதுகில் விழுந்ததே என்று துடித்தனர். விண்ணும் மண்ணும் பாதலமும் மீதலமுமாகிய எங்குமுள்ள உயிர்களின் மீதும் அடி விழுந்தது.

அரசன் வியந்து, அடிபட்ட ஆளைக் காணது திகைத்தான். வந்தியாளாக வந்தவர் இறைவனே என்று வியந்தான். மாணிக்கவாசகரை அழைத்துத் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன்.

மாணிக்கவாசகர் நமக்கு ஏன் இவ்வடிமை வாழ்வு என்று அமைச்சர் பதவியைத் துறந்தார். திருப்பெருந்துறை சென்றூர்; குருநாதன்திருவடியில் கூட்டத்தோடு கலந்து விளங்கினர்.

ஒருநாள் குருநாதன் தமது அடியார்கூட்டங்களை அழைத்து, இதோ உள்ள குளத்தின் நடுவில் ஒரு சோதி தோன்றும்; அதில் நீங்கள் அனைவரும் மூழ்குங்கள்; வாதவூரன் மட்டும் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு, நலமலி தில்லையுள் - கோலமார்திருப் பொதுவினில் வருக; அங்கு நாம் அவனுக்கு வீடுபேறு

அளிப்போம் என்றுசொல்லி மறைந்தனர். அடியார்கள் அனைவரும் சிவச்சோதியுட்கலந்தனர்.

மாணிக்கவாசகர் உத்தரகோசமங்கை முதலான தலங்களை வழிபட்டு, செந்தமிழ்ப் பாடல்களைப் பாடித் தில்லையில் வந்து திருத்தலத்திற்குப் புறம்பே ஐந்து கல் தொலைவில் உள்ள வில்வவனமாகிய பித்தபுரத்தில் தங்கியிருந்தார்.

ஈழநாடாகிய யாழ்ப்பாணத்திலே சிவனடியார் ஒருவர் எப்பொழுதும் 'பொன்னம்பலம் பொன்னம் பலம்' என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். புத்த பிட்சுக்கள் இவனென்ன இப்படிக் கூறுகின்றானே என்று சிங்களவனாகிய தமது அரசனிடம் தெரிவித் தனர். அரசன் அவ்வடியாரைக் கூப்பிட்டு, ஓய் பிட்சு! பொன்னம்பலம் என்றால் என்ன என்று கேட்டான். சிவனடியார் பொன்னம்பலத்தின் பெருமைகள் அனைத் தையும் கூறினார். அரசன் அப்படியா! அவ்வளவு சிறந்த இடத்தில் அல்லவா நமது புத்தப்பெருமானை எழுந்தருளச்செய்யவேண்டும் என்றெண்ணி, பிறந்தது முதல் ஊமையாயிருந்த தன் பெண்ணையும் குருவை யும் அழைத்துக்கொண்டு தில்லைக்கு வந்தான். புத்த குரு வந்தவுடன் தில்லைவாழ் அந்தணர்களை வாதுக்கு அழைத்தான். தில்லைவாழந்தணர்கள் சிந்தை கலங்கிச் சிவபெருமானிடம் விண்ணப்பித்தனர்.

அன்று இரவு தில்லை மூவாயிரவர் கனவிலும் நடராசப்பெருமான் எழுந்தருளி, அந்தணர்களே! பித்தன் என்று உங்களால் அழைக்கப்பெற்ற மாணிக்க வாசகன் வில்வவனத்தில் சிவயோகத்திலிருக்கின்றான்;

அவனை அழைத்துப் புத்தர்களை வெல்லச்செய்யுங்கள் என்று உத்தரவிட்டார்.

தில்லைவாழந்தணர்கள் நடராசப்பெருமான் கூறிய படியே சென்று மணிவாசகரை அழைத்து வந்தனர். சிற்சபைக்கு எதிரில் பெரிய கூட்டம். சோழமன்னன், அந்தணர்கள், அறிஞர்கள், மடபதிகள், அடியார்கள் எல்லோரும் கூடியிருக்கிறார்கள்.

மணிவாசகர், புத்தகுருவே! உமது வாதத்தை உரைக்கலாமே என்றார்.

புத்தகுரு தம் வாதங்களை மிக விரிவாகக்கூறினான்.

மாணிக்கவாசகர் மறுத்தார். புத்தகுரு திரும்பத் திரும்பப் பிடிவாதமாக அதையே கூறிவந்தான். மணி வாசகர் புத்தகுருமார்களை ஊமைகளாக்கினர். அதனைக் கண்ட அரசன், பேசியவர்களை ஊமைகளாக்கிய நீர் ஊமையான என் பெண்ணைப் பேசவைத்தால் நானும் என் நாட்டுமக்களும் உமக்கு வழிவழி அடிமையாக ஆவோம்; உம் சமயத்தை உண்மையெனத் தழுவி உய்வோம் என்றான்.

மாணிக்கவாசகர் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பல கேள்விகளைக் கேட்டார். அவற்றிற்கு அந்தப் பெண்ணே பதில் சொல்லியது. அவைகளையெல்லாம் தொகுத்து மாணிக்கவாசகர் திருச்சாழல் என்னும் பதிகம் ஆக்கினார்.

அரசன் அடிமையானான். தம் குருமார்களையும் மன்னித்துப் பேசவைக்கவேண்டும் என்று வேண்டிக்

கொண்டான். மாணிக்கவாசகசுவாமிகள் அவ்வாறே அவர்களையும் பேசவைத்தார். அனைவரும் சைவசமயத்தைச் சார்ந்தனர்.

பின்னர்ச் சிலநாட்கழித்து, தில்லைவாழ் நடராசப் பெருமானே ஓரந்தணச்சிறுவனாக மாணிக்கவாசகனுரிடம் எழுந்தருளினார். திருவாசகம் முழுவதையும் எழுதினார். திருக்கோவையாரும் சொல்லுக எனக் கேட்டு எழுதினார். இரண்டையும், மாணிக்கவாசகன் சொல்ல அழகியதிருச்சிற்றம்பலமுடையான் எழுதியது எனக் கைச்சாத்திட்டுத் திருவம்பலத்திலே பஞ்சாக்கரப்படியிலே வைத்தார். மறுநாள் விடியற்காலையில் வழிபட வந்த தில்லைவாழந்தணர்கள் ஏட்டைக்கண்டு வியந்து எடுத்துப் பார்த்தனர். இறுதியிலே திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்தும் இருக்கக்கண்டு மணிவாசகருக்குக்காட்டி இதற்குப் பொருள் யாது? நீரே சொல்லவேண்டும் என்று வினவினர்.. மாணிக்கவாசகப்பெருமான் அனைவரையும் கூடவேயழைத்துக் கொண்டு சிற்சபையையடைந்து நடராசப்பெருமானைச் சுட்டிக்காட்டி யான் கூறிய வாசகத்திற்குப் பொருள் இவரே எனக்கூறித் திருவடியிலே மறைந்தனர். இவர் சிவானந்தப்பெருவாழ்வு எய்திய நாள் ஆனிமாதத்து மகம் ஆகும்.

இவ்வண்ணம் மணிவாசகர் தோன்றினார். கல்வியும் செல்வமும் - பதவியும் பட்டமும் உறுதியல்லாதன, உயிர்க்கு நன்மை பயவாதன என்று உதறித் தள்ளினார்; இறைவனே உண்மைக் குருவாகவந்து உபதேசிக்க விரும்பினார்; பெற்றார்; உலகமுய்ய அன்பினைச்சுரக்கும் அருங்கவிதைகளாகிற திருவாசகத்தை

அருளிச்செய்தார்; மன்னன்மனத்தைமாற்றிச் சிவனடியாராக்கினார்; புத்தரை வென்று சைவத்தை நிலைநாட்டினார்; வாதுபேசியவரை ஊமையாக்கினார்; ஊமைப் பெண்ணைப்பேசவைத்தார்; இறைவனையே கூலியாளாகவும் குதிரைக்காரனாகவும் வரச்செய்தார்; கண்ணுதற் கடவுளே கையேட்டுப் பிள்ளையாக வந்து எழுதிக் கொள்ளவும் செய்தார்.

## மெய்கண்டார் தோன்றினார்

அன்புநெறிக்குள்ளே ஞானநெறி கலந்திருந்தமையால் அன்புநெறியே சிறந்தது; அன்புநெறி அருள்நெறியாகிய சிவஞான நெறிக்கு வழிகாட்டச் சிவஞான நெறியில் சென்றவர்களே வீடுபேறு அடையமுடியும் என்ற உண்மை இலைமறைகாய்போல இருந்தகாலத்திலே வேதசிவாகமத் தெளிவாகிய மெய்ப்பொருள் அறிவை விளக்கத் தோன்றினார் மெய்கண்டார்.

தமது தோற்றம் ஏனைய மக்களைப்போல வினை வயப்பட்டது அன்று, உலகிற்கு நன்மை பெருக அருள்ஞானம் வழங்கவே வந்த பிறப்பு என்பதனை, 'தாய் தந்தையர் நெடுநாளாகப் பிள்ளையில்லாது வருந்தினர்; தம் குலகுருவாகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகளை இதற்கு ஏதேனும் பரிகாரம் உண்டா என வினவினர்; அவர் திருமுறையிலே கயிறு சாத்திப் பார்த்தார்.

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண் டாவொன்றும்

வேயனதோ ளுமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே.

என்ற பாடல் உதயமாயிற்று. உடனே அவர்களைத் திருவெண்காட்டிற்குப்போய் முக்குளம் ஆடி முறைப்படித் தலவாசம்செய்யப் பணித்தார். அங்கே இறைவனருளால் சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமத்தோடு மெய்கண்டார் தோன்றினர்' என்ற வரலாறே மெய்ப்பிக்கும். ஆகவே, மெய்கண்டார் சிவனருளால் சிவஞானம் பரப்பவந்த செம்மலார் என்பது வெளிப்படையல்லவா ?

மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது திருவெண்ணெய்நல்லூரிலே நன்மாமனருடைய வீட்டில் வளர்ந்து வந்தார். ஒரு நாள் காலையில் வீதியிலே சிறு தேருருட்டி விளையாடினர். வான்வழியாகச் சென்ற பரஞ்சோதிமுனிவருடைய பார்வை இக்குழந்தைமீது பட்டது. இறங்கி வந்தார். குழந்தையை அருட்கண்ணோடு பார்த்தார். குழந்தையும் மற்றக் குழந்தைகள் போல விளையாட்டில் விருப்பமில்லாமல் வந்த முனிவர் பெருமானையே உற்றுநோக்கியது. முனிவர் பெருமான் தாம் தேடிவந்த பொருள் இங்கேயே கிடைத்துவிட்டதென்று எண்ணினர் ; அக்குழந்தையிடம் சென்று அதன் வலதுகாதில் சிவமந்திர உபதேசமும், சிவஞான அநுபூதித்திறமும் அருளினர் : மெய்கண்டார் எனத் தீட்சாநாமமும் சூட்டினர். தம்பி! நீ நெடுநாளிருந்து பரிபாகமுற்ற மக்களுக்குச் சிவஞானோபதேசம்செய்து வருக என ஆணையிட்டு வான்வழியே சென்றார்.

மெய்கண்டசிவம் பரிபாகம் உற்ற பலருக்கும் சிவஞானோபதேசம் செய்து வருவதைக் கேள்வியுற்ற அருணந்தி சிவாசாரியார் திருவெண்ணெய்நல்லூருக்கு வந்தார்; மெய்கண்டதேவர் இருப்பிடத்தை அடைந்தார்; வெளியே மெல்ல உலாவிக்கொண்டிருந்தார். மெய்கண்டதேவர் தம் மாணுக்கர்களுக்கு ஆணவமல இலக்கணத்தை விளக்கிக்கொண்டிருந்தார். இதனைச் செவிமடுத்த சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரியார் உள்ளே நுழைந்தார். மெய்கண்டார் திருமுன்பு சென்று நின்ருர். பாடம் நின்றது. மெய்கண்டதேவர் தம் குலகுருவாகிய அருணந்தி சிவாசாரியரைக் கண்டு எழாமலும், வணங்காமலும், ஒன்றும் பேசாமலும் சிவானுபூதிநிலையில் இருந்தார். அருணந்தி சிவாசாரியார் இப்போது என்ன பாடம் நடக்கிறதோ? என்ருர். மெய்கண்டதேவர் நிலையினின்று மீண்டு ஆணவமலத்தின் இலக்கணம் என்ருர். அப்படியானல் ஆணவமலத்தின் சொரூபம் யாது? அதன் உண்மை யாது? அதனல் விளையும் பொல்லாங்குகள் யாவை? அம்மலத்தைப் போக்குதற்கு உபாயம் யாது? என்று பலவாருக வினவினர். தமது கல்விச்செருக்குத் தோன்றும்வண்ணம் நின்ருர்.

மெய்கண்டதேவர் சிறிது நகைதோன்றச் சிரித்து, சகலாகம பண்டிதரையே சுட்டிக்காட்டினர். மெய்கண்டதேவர் திருவருள் நோக்கம்பெற்ற அக்கணமே குலகுருவாகிய சகலாகமபண்டிதர் உண்மைஞானம் பெற்று அடியற்ற மரம்போலத் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சிவஞானபோதத்தை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும் என்று விண்ணப்பித்தனர். உடனே மெய்கண்ட சிவம் சகலாகம பண்டிதரின்

அதிதீவிர பரிபாகத்தையுளங்கொண்டு திருவடிதீட்சை செய்து சிவஞானபோதத்தை உபதேசித்தனர். தமது மாணுக்கர் நாற்பத்தொன்பது பேருக்கும் தலைவராக விளங்கும்வண்ணம் அருள்செய்தார். 'அருணந்திசிவம்' என்ற தீட்சாநாமமும் சூட்டினர். பலநாள் சிவவாழ்வு வாழ்ந்திருந்து, ஒரு ஐப்பசிமாதத்துச் சுவாதிநாளில் திருவெண்ணெய் நல்லூரிலே சிவானந்தப் பெருவாழ்வு எய்தினர்.

இவ்வண்ணம் சுவேதவனப்பெருமாளாக இருந்த பெருமான், பரஞ்சோதி முனிவர்பெருமான் அருளுபதேசத்தால் மெய்கண்டார் ஆனுர்; அநுபவ சமாதியிலிருந்து, பல மாணுக்கர்களுக்குச் சிவஞானேபதேசம் செய்து, தம் குலகுருவுக்கே குருநாதனுகி, சிவஞானபோதம் என்னும் ஞான நூலை உலகிற்குதவி நித்தியானந்தப் பெருவாழ்வு எய்தினுர்.

## அருணந்திசிவம் தோன்றினுர்

ஆதிசைவ ஆசாரிய குலத்திலே தோன்றித் தம் குலத்திற்கேற்ற சடங்குகளை எல்லாம் உரியகாலத்தே பெற்று, வேதாகமங்கள் அனைத்தையும் முறையாகப் பயின்ருர். கற்றவற்றைச் சிந்தித்துத் தெளிந்து, சிவயோக சமாதியில் நிலைபெற்றுச் சிறந்த சைவசீலராகப் பெரும்புகழுடன் விளங்கிவந்தார்.

பல அன்பர்கள் இவரிடம் சமயம், விசேடம், நிர்வாணம் ஆகிய தீட்சைகளைப் பெற்று உய்ந்தனர். பல குடும்பங்களுக்குக் குலகுருவாகவும் விளங்கினுர். முன்னர்க் கூறியவாறு மெய்கண்டதேவர்பால் ஞான தீட்சை பெற்று, சிவஞான உபதேசமும் பெற்ருர்.

அவ்வாசிரியப் பெருமகனாரிடம்பெற்ற சிவஞானபோத நூல் மிகச் சுருக்கமும், ஆழமும், அனுபவத்திற்கு இன்பமும் தருவதாக இருத்தலை அனுபவித்தறிந்து, மிக எளிய முறையில் இனிய ஓசையோடு, தெளிவாக எல்லாரும் கற்று உய்யும்வண்ணம் சிவஞானசித்தியார் என்னும் நூலை விருத்தப்பாவினால் அருளிச்செய்தார். மேலும், இருபா இருபஃது என்னும் சிற்றிலக்கியம் ஒன்றையும் சித்தாந்தப்பிழிவாக அருளினர்.

பின், தம் ஞானசந்தானம் இடையறாது வளர்ந்து வர, மறைஞானசம்பந்தருக்கு உபதேசம் செய்து, ஒரு புரட்டாசி மாதத்துப் பூரநாளில் திருத்துறையூரிலே சுத்தாத்துவித சித்தாந்தமுத்தியை அடைந்தார்.

இவ்வண்ணம் தேகசம்பந்தமான சாதி முதலான வரம்புகட்கு அப்பாற்பட்டது சிவஞானம் என்பதை உணர்த்தி, தாம்பெற்ற அருமையான சிவஞானத்தை எல்லாரும் எளிதில் கற்றுணரும்வண்ணம் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் இருநூல்களாகத்தந்து, இறவாத இன்பஅன்பைப்பெற்று இறைவன் திருவடிகிழலை அடைந்தார்.

### மறைஞானசம்பந்தர் தோன்றினர்

ஸ்ரீ மறைஞானசம்பந்த சிவாசாரியர் மருதூரிலே தோன்றினர். பெண்ணாகடத்திலே வசித்தார். பராசர கோத்திரத்தவராக அந்தணகுலத்திலே தோன்றினர். அருணந்திசிவாசாரிய சுவாமிகளுடைய திருவருளுக்கு இலக்கான பின்பு, பெரும்பாலும் சிதம்பரம் மேலைத் திருக்கோபுரத்திலுள்ள குகையிலேயே சிவசமாதிகூடியிருப்பார்.

இவர் வடமொழியில் நிரம்பப் பாண்டித்தியம் பெற்றவர். இவர் செய்த நூல் சிவசகஸ்ரநாமபாஷ்யம். இது இன்னும் வெளிவரவில்லை.

ஒருநாள் நண்பகல் பன்னிரண்டுமணி இருக்கும். ஒரு வீட்டில் கூழ் அருந்திக்கொண்டிருந்தார். ஸ்ரீ நடராசமூர்த்திக்கு உச்சிக்கால பூசையை முடித்துக் கொண்டு தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவராகிய ஸ்ரீ உமாபதிசிவம் பல்லக்கிலேறிக் கைத்தீவர்த்தி கொட்டு மேளம் இவற்றுடன் வந்துகொண்டிருந்தார். மறை ஞானசம்பந்தருக்குக் கூழ்வார்த்த அம்மையார் கூழ் வார்ப்பதை நிறுத்திவிட்டு வேடிக்கை பார்த்தனர். அதற்குள் பல்லக்கு அந்தவீட்டு ஓரமாகவந்துவிட்டது. மறைஞானசம்பந்தர் ஏன் அம்மே! பட்டகட்டையில் பகற்குருடு ஏகுவதையா பார்த்துக்கொண்டிருக்கின் றீர்கள் எனக்கேட்டார்.

இவ்வுரை உமாபதிசிவத்தின் காதிலும் பட்டது. இதுவே அவருக்கு உபதேசம் ஆயிற்று. சிவிகையில் இருந்து குதித்தார்; ஓடினூர்; மறைஞானசம்பந்தரின் முழங்கைவழியாக ஒழுகும் கூழை வாங்கிக்குடித்தார். உமாபதிசிவத்தின் அதிதீவிர பக்குவநிலையை அறிந்த மறைஞானசம்பந்தர் தமக்குக் குருபரம்பரையாகக் கிடைத்த சிவஞானபோதத்தை உபதேசித்தார். உப தேசங்கேட்ட அளவிலேயே உமாபதிசிவம் சிவானு பூதியில் திளைத்து விளங்கினூர். இவ்வண்ணம் பரிபாக முற்ற பலருக்குச் சிவஞானோபதேச குருமூர்த்தியாக விளங்கிய மறைஞானசம்பந்தர் சிதம்பரத்திற்கு மேல் பாலுள்ள திருக்களாஞ்சேரியிலே பிரமபுரீசர் சந்நிதி யிலே சிவானந்த நிட்டைகூடி ஒரு ஆவணிமாதத்து

உத்தரத்திருநாளிலே சுத்தாத்துவித சித்தாந்தப்பேரின்ப நிலை பெற்றார்.

மறைஞானசம்பந்தர் பராசரகோத்திரத்தில் தோன்றினர். சிவஞான அநுபவம் கைகூடப்பெற்று அதிவர்ணாச்சிரமியாய், சிவயோகமே சிறந்த முத்திநெறி என்பதைத் தெரிவித்துச் சிவசகஸ்ரநாம பாஷ்யம் ஒன்றையும் அருளி முத்தியடைந்தார்.

## உமாபதிசிவம் தோன்றினர்

அதிவர்ணாச்சிரமியாக அதாவது சாதிவரம்பைக் கடந்து விளங்கிய மறைஞானசம்பந்தரிடம் சிவஞான உபதேசம்பெற்று, சிவா நுபூதிச் செல்வராக விளங்கிய தில்லைவாழந்தணர் உமாபதிசிவாசாரியார். அற்புதங்கள் பல நிகழ்த்தியவர். அதீதத்தே நிலைத்தவர். சாதிவரம்புட்பட்ட தில்லைவாழந்தணர்களோடு கூடிவாழ இயலாது, பிரிந்து, தில்லையின் கீழ்பாலுள்ள கொற்றவன்குடியிலே ஒரு திருமடம் அமைத்துக்கொண்டு வாழ்ந்துவந்தார். பரிபக்குவம் பெற்ற அடியார்கள் எந்தக் குலத்தவராயினும் சரி அவர்கட்குச் சிவதீட்சையும் சிவஞான உபதேசமும் அருளிவந்தார்.

ஒருநாள் 'பெற்றான் சாம்பான்' என்னும் பறையன் ஒருவன் சிவதீட்சை பெறவேண்டும் என்ற பெரு விருப்பத்தால், திருக்கோயிலுக்கு வேண்டிய விறகு, மத்தளத்திற்குத் தோல், யாழுக்கு நரம்பு முதலியன கொடுத்துவந்தான். அங்ஙனமே உமாபதி சிவத்தின் திருமடத்திற்கும் விறகுமுதலிய சாதனங்களையளித்து வந்தான். இவன் மனநிலையைத் திருவுள்ளம்பற்றிய நடராசப்பெருமான் உமாபதி சிவாசாரியருக்கு,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு - படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்கை முறை.

என்ற சீட்டுக்கவி ஒன்றைத் தந்து அவனை வழிப்படுத்தினர். பெற்றான்சாம்பான் உமாபதிசிவாசாரியாரிடம் சென்று இக்கவிதையைத் தந்து வீழ்ந்து வணங்கினான். உமாபதிசிவம் சாம்பானுடைய அதிதீவிரபக்குவத்தை அறிந்து, சத்தியோநிர்வாண தீட்சைசெய்து அப்போதே முத்தி கொடுத்தனர். இவ்வதிசயம் எங்கும் பரவிற்று.

சிலர் உமாபதிசிவம் இப்படித்தகுதியில்லாதார்க்கு முத்தி அளிப்பதை மனம் பொறுக்காமல், உடனே முத்தியென்பது நடக்கக்கூடிய காரியமா? ஏதோ சாம்பானை இவர் கொலைசெய்துவிட்டார் என்று அரசனிடம் தெரிவித்தனர். அரசன் அவர்கள் சொல்வதை நம்பவில்லையாயினும், இவர்பெருமையை உலகவர்க்கு உணர்த்துவதற்காக, சுவாமிகளே! தாங்கள் சத்தியோநிர்வாண தீட்சையால் இவனுக்கு முத்திகொடுத்தது உண்மை, ஆயினும் உலகம் ஏதோ உளறுகிறது; எம் கண் காணத் தேவரீர் யாருக்கேனும் முத்தி கொடுக்க வேண்டுமென வேண்டிக்கொண்டான். உமாபதிசிவம் அதற்குரிய தகுதி உடையார் ஒருவரும் அப்போது இல்லாமையால், சூழலைப்பார்த்து, திருமஞ்சனதீர்த்தம் தங்கும் கோமுகத்தொட்டியிலே ஒரு முள்ளிச்செடியிருப்பதைப் பார்த்தார். அது உடனே எரிந்து முத்தியின்பம் பெற்றது. எல்லோரும் வியந்தனர். பகைவர் நாணினர்.

திருக்கோயிலில் ஒரு ஆனிமாதத்துக் கார்த்திகை நாளில் கொடியேற்றுவிழா நடைபெற இருந்தது; அந்தணர்கள் எல்லாச்சடங்குகளையும் இயற்றினார்கள். கொடியேறவில்லை. வருந்தினர். நடராசப்பெருமான் அசரீரியாக உமாபதிசிவத்தின் பூசைப்பெட்டகத்துள் நாம் இருக்கிறோம்; ஆதலால் அவனிடம் சென்று, கொடி உயர்த்துக எனவேண்டிக்கொள்ளுங்களென்று கூறினர்.

தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதிசிவத்தினிடம் சென்று வேண்டிக்கொண்டார்கள். உமாபதிசிவனார் திருமடத்திலிருந்தபடியே நடராசப்பெருமான் திருவருளைப்போற்றிக் கொடிக்கவி என்னும் நூலை இயற்றித் தோத்தரித்தார். திருக்கோயிலிலே கொடி தானாகவே ஏறியது.

சைவத்தமிழுலகம் ஈடேறச் சிவஞானசித்தியாரின் வழிநூலாகச் சிவப்பிரகாசத்தையும், திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, போற்றிப்பஃறொடை, உண்மைநெறி விளக்கம், கொடிக்கவி, வினாவெண்பா, சங்கற்ப நிராகரணம் முதலிய எட்டு நூல்களையும் அருளிச் செய்தார். இவை சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் இறுதியில் விளங்கும் எட்டுநூல்கள். இவை அட்டப் பிரகரணம் எனவும் வழங்கப்பெறும்.

கோயிற்புராணம், சேக்கிழார் புராணம் முதலியன வும் இவர்களால் இயற்றப்பெற்றனவே. வடமொழி யில் பௌஷ்கர விருத்தி என்னும் பேருரையும் எழுதி யுள்ளார்.

இவர்கள் நெடுங்காலம் சிவானந்த நிட்டையில் எழுந்தருளியிருந்து, பின்பு தம்முடன் பயின்றவராகிய

அருணமச்சிவாயமூர்த்திகளிடம் ஆசாரிய பரம்பரைத் தலைமையை ஒப்புவித்து, சாலிவாகன சகம் 1235ல் (கி. பி. 1313ல்) சிவானந்தப்பெருவாழ்வெய்தினார்கள்.

உமாபதி சிவம் தோன்றினார்; ஞானம் சாதியும் கொள்கையுமாகிய முள்வேலிகட்கு அப்பால், வெட்ட வெளியில் பெருவிளக்காக விளங்குவது என்பதை உணர்த்தினார். பலரும் எல்லாக்காலத்தும் ஈடேற எட்டு நூல்களைத் தந்தார். எண்ணரிய அற்புதங்களைச் செய்தார்.

## அருணமச்சிவாயர் தோன்றினார்

சீகாழியிலே சைவவேளாளமரபிலே தோன்றினார்; மறைஞான சம்பந்தரிடம் ஞானோபதேசம் பெற்று, உமாபதி சிவாசாரியருக்குப் பின்பு கொற்றவன் குடி மடத்திலிருந்து அழகிய திருச்சிற்றம்பலமுடையாரை வழிபட்டுச் சிவஞானோபதேசம் செய்து வந்தார். சித்தர் சிவப்பிரகாசரைத் தேர்ந்து குருபரம்பரையிலே வாழ்ந்துவரப் பணித்தார். நல்ல சீடரைத் தேர்ந்து சிவஞான பரம்பரையைக் காத்தது ஒன்றே இவர்கள் செய்த பெரும்பணி.

## சித்தர்சிவப்பிரகாசர் தோன்றினார்

சித்த மூர்த்திகளாகிச் சிவஞானோபதேசம் பெற விரும்பித் தில்லைக்கூத்தனை வழிபட்டுவந்தார். பின்னர் அருணமச்சிவாயரை அடைந்து உபதேசம் பெற்று ஞானமா நடராசப் பெருமானையும் பூசிக்கும் பேறு பெற்றார். இவர்கள் பெரும்பாலும் சிவயோக சமாதி கூடுகிறதலம் திருவாவடுதுறையும் வேதாரணியமுமாம்.

இவர்களைச் சித்தபரம்பரையிலே சிவஞான பரம்பரையை இணைத்துச் சிவயோக சுவாமிகளாகச் சிவஞானம் பெறுதற்கு உரிய உபாயங்களை உணர்த்தத் தோன்றியவர்கள் எனலாம்.

## நமசிவாயமூர்த்திகள் தோன்றினர்

முன்னைப் பல பிறவிகளில் செய்த சிவபுண்ணிய முதிர்ச்சியால் அதிதீவிரதர பக்குவமுள்ள ஒரு சிறுவர் சித்தர் சிவப்பிரகாசரைத் திருவீதியிலேயே கண்டார். காந்தங்கண்ட இரும்புபோல அவரைத் தொடர்ந்து செல்வாராயினர். அச்சிறுவர், மூவலூரில் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருவருளால் தோன்றியவர். பெற்றோர் அவருக்கிட்ட பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதர் என்பது. சுமார் ஏழுபிராயம் வந்த அளவில் பெற்றோர் பிரார்த்தனையை நிறைவேற்றக் கருதித் தம் குழந்தையை அழைத்துக் கொண்டு புள்ளிருக்குவேளூரடைந்தனர். சித்தாமிர்த தீர்த்தத்திலே விதிப்படி நீராடினர். ஸ்ரீ வைத்தியநாத மூர்த்தியையும், தையல்நாயகியம்மையாரையும், செல்வ முத்துக்குமார சுவாமியையும் தரிசனம் செய்தனர்; அருச்சித்துப் பிரார்த்தனை முதலியவற்றைச் செலுத்தினர்; பின்னர் சண்டேசுரர் சந்நிதிக்குச் சென்றனர்; திரும்பினர்; உடன்வந்த வைத்தியநாதரைக் கண்டிலர்; பதைபதைத்து ஓடி எங்கெங்கும் தேடினர்; வைத்தியநாதர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி சந்நிதியில் மனமுருகிக் கண்ணீர்வார மெய்ம்மயிர் பொடிப்பத் தழுதழுத்த நிலையில் தம்கையில் ஒரு சிவலிங்கமூர்த்தியை வைத்துக் கொண்டு நிற்பதைக் கண்ணுற்றனர். பதைபதைப்பு நீங்கினர். குமாரரைப் பார்த்து இந்தச் சிவலிங்கமூர்த்தி

ஏது? என வினவினர். இப்பொழுதுதான் சந்நிதியி லிருந்து சிவாசாரியார் ஒருவர் வந்து இச்சிவலிங்கத்தை என்கையிலே கொடுத்து 'அன்புடன் இதனைப் பூசித்து வருவாயாக' எனக் கட்டளையிட்டு உள்ளே சென்ருர் என்ருர். இதனைக் கேட்ட பெற்ருேர் திருவருளைச் சிந்தித்து மீண்டும் வைத்தியநாதக் கடவுளையும் தைய ஞயகி அம்மையாரையும் வணங்கி விடைபெற்றுக் குமாரரையும் அழைத்துக்கொண்டுபோய்ச் சண்டேசுர தரிசனம்செய்து ஊருக்குத் திரும்பினர். குமாரரும் அன்றுமுதல் அச்சிவலிங்கமூர்த்தியைப் பூசித்திருந்தார்.

வைத்தியநாதராகிய அந்தச் சிறுவர் வீதியிலிருந்து தம்மைத் தொடர்ந்து வருதலையும், அவருக்குள்ள அதி தீவிரதர பக்குவத்தையும், சிவபுண்ணிய முதிர்வையும் சிந்தித்துணர்ந்து திருக்கோயிலையடைந்து வழித்துணை நாதரையும் அம்மையாரையும் வணங்கிக்கொண்டு அங் குள்ள ஒரு திருமடத்திலே வந்து சித்தர் சிவப்பிரகாசர் தங்கினர். சிவஞானப்பேற்றுக்கு உரிய நற்குறிகளை யெல்லாம் வைத்தியநாதர்பால் கண்டார். திருவருட் குறிப்பை எண்ணி மகிழ்ந்தார். வைத்தியநாதர் தமது வீட்டிற்குச்சென்று பெற்ருேரிடத்தில் ஞாஞசிரியரைத் தரிசித்தமையைக் கூறிச் சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு ஆசிரியருடன் செல்வதற்கு விடைகொண் டார். பெற்ருேர் பிள்ளையைப்பிரிய மனமில்லாமல் வைத்தியநாதருடன் சித்தர்சிவப்பிரகாசர் தங்கியுள்ள திருமடத்தைச் சார்ந்தனர். அப்பெரியாரை வணங்கி நின்று வழிபட்டனர். அதனைக்கண்ட ஞாஞசாரியர் குழந்தையின் பெற்ருேரைப் பார்த்து 'இதுவரையில் வைத்தியநாதன் உங்களுடைய குழந்தையாக இருந்து வளர்ந்துவந்தான்; அவன் இனி நமக்குக் குழந்தையாக

ஆயினன்; அவன் ஞானப்பிள்ளை; அவனைப்பற்றி உங்களுக்குச் சிறிதும் தொடர்பில்லை; கவலைப்படவேண்டாம்; நாம் அழைத்துச் செல்லுகிறோம்' என்று கூறி வைத்தியநாதரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு வேதாரணியத்தை அடைந்து அங்குள்ள ஒருகுகையில் சிவானந்தநிட்டையில் அமர்ந்தார்.

பின் எழுந்து திருவருட்பார்வையால் வைத்தியநாதரைநோக்கி ஞானதிக்கை புரிந்தார். தமது ஆசிரியர் திருநாமத்துக்கு இயைய வைத்தியநாதருக்கு 'நமச்சிவாயன்' எனத் தீட்சாநாமம் சாத்தியருளினர். தமது குருபரம்பரையிலே தாம் பெற்ற சிவஞானபோதம் முதலிய சாத்திரங்களையும் உபதேசித்தருளினர். சிவஞானனந்த அனுபவம் கைவருமாறு அநுக்கிரகம்செய்தார். பின்னர் நமச்சிவாயரையும் கூட்டிக்கொண்டு திருவாவடுதுறை அடைந்தார். சித்தர்சிவப்பிரகாசர் சிலநாட்கள் திருவாவடுதுறையிலேயே சிவானந்த நிட்டையில் அழுந்தியிருந்தார்.

ஒருநாள் நமச்சிவாயரைத் தமது அருகிலழைத்து 'ஆசாரியனாயிருந்து சிவஞானோபதேசம் செய்துவருக; ஞானசாரிய பரம்பரையைப் பாதுகாத்தருள்க' எனக் கூறித் தமக்கு ஆசாரிய பரம்பரையிலே கிடைத்த ஸ்ரீ ஞானமாநடராசமூர்த்தியையும் அழகிய திருச்சிற்றம்பலமுடையாரையும் கொடுத்துப் பரம்பரையிலே பூசித்துவருமாறு அதிகாரம் அளித்து, ஸ்ரீ நமச்சிவாய தேசிகருக்கு முன்பு கிடைத்த சிவலிங்கமூர்த்தியை ஆன்மார்த்த உடையவர் பூசையாகவும் எழுந்தருளப் பண்ணியருளி 'வைத்தியநாதர்' என உடையவர் திருநாமமும் வழங்கினர். அதன்பின் திருவாவடுதுறையில்

தாம் இருந்த அவ்விடத்திலே ஒரு அறை கீறி அதிலே வீற்றிருந்து சுத்தாத்துவித சித்தாந்தசைவமரபு தழைத்தோங்குமாறு அநுக்கிரகம்பண்ணிவருவாயாக என ஆணை அருளிச் சிவப்பிரகாசர் வேதாரணியத்திற்குச் செல்வாராயினர். தமது ஞானசாரியரைப் பிரிதல் ஆற்றாத ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் மிகவும் வருந்தினர். ஞானசாரியரின் ஆணையைக் கடத்தற்கும் இயலாத நிலையில் பெரிதும் அச்சமுற்றவராய் ஆசிரியர் கீறிய அறையிலே தாமும் வீற்றிருந்து சிவஞானோபதேசம் செய்து வருவாராயினர். சிவஞானபோத நெறியைத் தம்மையடுத்துவரும் பக்குவர்கட்கு அருளி, சிவஞான அநுபவம் கைகூடச்செய்தனர். அதுமுதல் ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளைப் பிரதம பரமாசாரியராகக்கொண்டெழுந்த திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் ஆதீனம் எனவே வழங்கிவருவதாயிற்று.

மேற்கூறிய சித்தர்சிவப்பிரகாசர் ஸ்ரீ நமச்சிவாய தேசிக மூர்த்திகளுக்கு அநுக்கிரகம் செய்தருளியமையைக் கீழ்க்குறித்த செய்யுளால் அறியலாம்.

திருந்துவட கயிலைதனில் பரமசிவ னளித்த
  சிவஞான போதமுணர் நந்திமுதற் சிறந்தே
வருங்குரவர் வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவன்
  வழங்கருட்சந் ததியினமச் சிவாயதே சிகனும்
இருங்குரவ னளித்தசிவப் பிரகாச தேவன்
  இலங்குமறை வனத்தருகோர் வனக்குகையி லுறைநாள்
பொருந்தியவன் திருவடிக்கீழ் அவனருளே வலினல்
  போந்தருளா வடுதுறைவாழ் நமச்சிவாயனைப்புகழ்வாம்.

என்பது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தேசிகர் திருவாக்கு.

ஸ்ரீ மெய்கண்டதேவர்முதல் ஸ்ரீ நமச்சிவாயதேசிகர் வரையிலுள்ள பரம்பரை உபதேச பரம்பரையாகும். திருநந்திதேவர் முதல் பரஞ்சோதிமுனிவர் ஈருயுள்ள பரம்பரை தேவபரம்பரை. மேல் நமச்சிவாயதேசிகர் ஈருகவுள்ள பரம்பரை பூதபரம்பரையாம். தேவபரம் பரை, பூதபரம்பரை என்ற இவ்விரண்டும் உபதேச பரம்பரை எனப்படும். மேல் வருவன அபிஷேக பரம்பரை.

ஸ்ரீ பஞ்சாக்கரதேசிக பரமாசாரிய சுவாமிகள் தம் ஞானசிரியர் கட்டளையின்படி அவர் வகுத்த அறையி லிருந்து, வரும் பக்குவர்கட்குச் சிவஞானேபதேசம் செய்து கொண்டிருந்தனர். இங்ஙனமாக, ஒருநாள் சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்கந்தபரம்பரையில் ஆசா ரியராய் விளங்கும் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் சிவஞான அநுபவ விசாரணை செய்யும்பொருட்டு ஸ்ரீ நமச்சிவாய தேசிகமூர்த்திகள்பால் எழுந்தருளியிருந்தனர். நேரமோ நண்பகல். ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளின் சீடர்களில் சிலர், சமயாசார சீலர்கள் வீட்டில் பிச்சை ஏற்று நின்றனர். ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் எழுந்தருளி வருவ தைக் கண்ணுற்ற அச்சீடர்கள் மிக்க பரபரப்புடன் கையிலிருந்த பிட்சாபாத்திரத்தை ஒரு திண்ணையின் மேல் வைத்துவிட்டு வந்து யோகிகளை வணங்கினர். சீடர்கள் நிலையினைக்கண்ட யோகிகள் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளிடம் தொண்டுபூண்டிருந்தும் இவர்கட்குச் சைவாசாரசீலம் வரவில்லையே என இரங்கிச்சென்றனர்.

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் நமச்சிவாயமூர்த்திகளுட னிருந்து திருமடத்தில் ஞானவிசாரணை செய்து அள வளாவி மகிழ்ந்து திரும்பினர். அப்போது சீடர்களுக்கு

இன்னும் ஆசாரசீலம் திருந்தாமையைத் தெரிவித்தார்கள். அதனைக்கேட்ட ஞானாசாரியர் சீடர்களைநோக்கி ஒருவர் ஆசாரியனைக் கண்டவுடன் இடத்தையோ - காலத்தையோ - நிலையையோ நோக்காமல் அடியற்ற மரம்போல அன்றோ விழுந்து வணங்குதல்வேண்டும்; அவ்வாறின்றிப் பிட்சாபாத்திரத்தை ஓர் இடந்தேடி வைத்தற்கும் அபிமானமன்றோ காரணமாயிற்று என இரங்கினர். அதனைக்கண்ட யோகிகள் இத்தகைய ஞானமூர்த்திகளை எவ்வாறு பிரிந்து உறைவது எனப் பெரிதும் வருந்தித் திருவாவடுதுறையிலே சிலநாட்கள் தங்கிச் சிவாநுபவநிலையில் திளைத்திருந்து தமது திருமடத்துக்குச் சென்றார்கள்.

பின்பு, ஒருகாலத்தில் தம் அடியார்களில் ஒருவர் மடத்துக் கொல்லையில் 'மாகேசுர பூசைக்கு ஆகுமே' எனக் கருதி ஒரு வாழைக்கன்றை வைத்து வளர்த்து வந்தார். அதனைக்கண்ட ஞானாசிரியர் வாழைக்கன்றை வளர்த்தற்குக் காரணமென்ன என்று வினவினார்கள். உடனே அடியவர் வணங்கிநின்று, மாகேசுரபூசையில் அடியார்கட்கு ஆகுமே என்றார். அவர் அறியாமைக்கு ஆசிரியர் இரங்கினார். அவரைநோக்கி 'நீர் தலயாத்திரை சென்று முற்றத் துறந்து மீளுக' என்று கட்டளையிட்டருளினார். அடியார் ஆசிரியர் கட்டளையின்படியே தலயாத்திரைசெய்து பரிபக்குவமுடையராய்த் திரும்பி வந்து அடியார்கூட்டத்தில் கலந்திருந்து இன்புற்றார்.

இவ்வண்ணம் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் தோன்றினார்கள். மலர் மாலைக்காலத்தே மலர்ந்து மணம் பொருந்துவதுபோல உயிர்கட்குப் பரிபாககாலத்தே சிவஞானம் கைவரப்பெறும் என்பதையும், அருள்

விளக்கம் பொருந்திய இடத்திலேயே அடியார்கள் கூடுவர், பொருளும்சேரும் என்பதையும்,சிவஞானியர் சிவஞானியரையே நேசிப்பர் பூசிப்பர் என்பதையும், பசு புண்ணியங்களைக் காட்டிலும் பதி புண்ணியம் செய்பவர்களையே சிவனருள் பொருந்தும் என்பதை யும் விளக்கி, என்றும் கண்கண்ட தெய்வமாக எழுந் தருளியிருக்கின்றார்கள்.

அடுத்து மறைஞானசம்பந்தர், 3-வது அம்பல வாணதேசிகர் முதலான இருபது மகாசந்நிதானங்கள் தோன்றினார்கள். அவர்களுடைய ஞானப்பிறவியே நமக்கெல்லாம் செந்தமிழ்க் கருவூலத்தைக் காத்து வழங்கியது. பல இலக்கண நூல்களையும், இலக்கியங் களையும் தோற்றுவித்தது. சிவானுபூதியை வழங்கி வருகிறது.

அத்தகைய பரம்பரையிலே இன்று இருபத்தொன் ருவது குருமகாசந்நிதானமாக ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தோன்றினார் கள். திருக்கூட்டச்சிறப்பு மிக்கதும், திருமகள் வழி பட்டுப் பேறு பெற்றதும், நிறைசெல்வத் தியாகேசப் பெருமான் திருவருள்விலாசத்திலே என்றும் விளங்குவ துமாகிய திருவாரூர் ஜன்மத்தலமாகும். ஞானவதாரத் தலம் திருவாவடுதுறை. இவர்கள் ஸ்ரீ நமசிவாயமூர்த்தி களின் நிறைந்த கருணைப்பெருக்கால் ஞானபீடத்து எழுந்தருளினார்கள்.

அதனால் நிர்வாகத்துறை நேர்மையான ஊதியம் பெற்று, உள்ளக்களிப்புடன் உழைக்கலாயிற்று. பண் டிகைப் பெருநாட்களில் தகுதிக்கேற்ற பரிசும் பாரம ரிப்பும் பெற்றுவருகிறது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நிர்வாகச் சக்கரத்திலுள்ள ஒட்டை உடைசல்களை அகற்றிச் செம்மையுறுத்தி அச்சமும் அன்புங்கலந்த அழகான முறையில் அதனை உருளச்செய்கிறார்கள். சொத்துப் பராமரிப்பும் கிராமப் பராமரிப்பும் நேரிலே அடிக்கடி கவனிக்கப் பெறுகின்றன. கிளைமடங்களில் நாள்வழி பாடும் – சிறப்பு வழிபாடும் நன்றாக நடைபெறுவ வாயின; பல நீர்த்தேக்கங்கள் எழும்பின; வயல்கள் செப்பனிடப்பட்டன; வருவாய் பெருகிற்று. ஆதீனத் திற்குச் சொந்தமான திருக்கோயில்களின் நிர்வாகம் நன்றாக நடைபெறத் தொடங்கியது; பல ஆலயங்கள் திருப்பணி செய்யப்பெற்றன; மகாகும்பாபிஷேகங்கள் நடத்துவிக்கப்பெற்றன.

சமயப்பணியும் கல்விப்பணியுமாக மாநாடுகள் பல கூட்டப்பெற்றன. நூற்றிருபதுக்கு மேலான நூல்கள் அச்சிட்டு வழங்கப்பெற்றன.

சமயப்பிரசாரம் செவ்வையாக நடைபெற்றுவர, பதின்மர் சைவப்பிரசாரகர் நியமிக்கப்பெற்றுள்ளனர்.

திருநெல்வேலி முதலாகப் பல இடங்களில் தேவா ரப் பாடசாலைகள் நியமிக்கப்பெற்றுள்ளன. நூல்நிலை யங்கள் நிறுவப்பெற்றுள்ளன.

திருவிடைமருதூரில் ஆதீன உயர்நிலைப் பள்ளி ஒன்று நடைபெறுகிறது. பல ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும், உணவும் வழங்கப்படுகிறது.

ஆதீனத்திலே சிவாகம வித்துவான்களையும், இரு மொழி வல்லவர்களையும் நியமித்து ஆகம ஆராய்ச்சி சிறந்த முறையில் நடத்தப்பெறுகிறது.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம் அழகான முறையில் அரிய பெரிய நூல்களை அச்சிட்டுவருகிறது.

தஞ்சாவூரில் ஹரகதா காலக்ஷேபக் கல்லூரிக்கு முழு உதவியும் அளித்து நிர்வகிக்கப்பெறுகிறது.

சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. வகுப்பில் படிக்கும் மாணவர்களில் சிவஞான போதம் இஷ்டபாடமாக எடுத்துப் படிப்பவர்களுக்கு உபகாரச்சம்பளம் உதவப்படுகிறது.

இவ்வண்ணம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தோன்றினர்கள். ஆதீனத்திலே கல்விப்பணியும் - அருட்பணியும் - உபதேசவளமும் பெருகுகிறது. வருவாய் பெருகுகிறது. வயல் திருந்துகிறது. உபகாரநிதிகள் உதவப்படுகின்றன. கலைகள் வளர்கின்றன.

அவர்கள் அருளாட்சி ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளின் திருவருளாலும் ஸ்ரீ ஞானமா நடராசப்பெருமானின் பேரருளாலும் நெடிது வாழ்க.

சுபம்